# *பொருள் அடக்கம்*

ஸ்ரீஅன்னையின் கண்ணோட்டத்தில் சாவித்ரி 4

சாவித்ரி காவியம் குறித்து ஸ்ரீ அரவிந்தர் 5

ஸ்ரீ அரவிந்தர் என்றொரு பேராசான் 6
*பிரேமா நந்தகுமார்*

"சாவித்ரி" வர்ண ஓவிய வடிவில் 13
- ஸ்ரீஅன்னையின் பார்வையில்

சாவித்ரி - குறித்த விபரம் 17
*ஹுடா*

சாவித்ரி 22
*மங்கேஷ் நட்கர்னி*

சாவித்ரி ஒளி 33

சாவித்ரி பவன் 42


Sri Aurobindo

*What Sri Aurobindo represents in the world's history is not a teaching, not even a revelation; it is a decisive action direct from the Supreme*



உலகின் வரலாற்றில் ஸ்ரீஅரவிந்தர்
ஒரு உபதேசத்தின் சின்னமாகவோ,
ஒரு வெளிப்படுத்தலின் சின்னமாகவோ
கூட விளங்கவில்லை, அவர் பரமனிடமிருந்து
நேரே வரும் முடிவுசெய்யும் செயலின்
சின்னமாக விளங்குகிறார்.

- ஸ்ரீ அன்னை

# ஸ்ரீஅன்னையின் கண்ணோட்டத்தில் சாவித்ரி

- அதை எழுதியவரின் ஆன்மீக அனுபவங்களைப்பற்றிய அன்றாடக் குறிப்பே சாவித்ரி.

- இறைவனை நோக்கி ஏறிச் செல்வதில் பூமி பின்பற்றும் யோகம்.

- தெய்வ அன்னை தான் எடுத்துள்ள உடலுடலும் அவள் அவதரித்துள்ள பூமியின் அஞ்ஞானம், பொய்மை இவற்றுடனும் ஒத்துப்போவதற்குச் செய்த முயற்சியில் ஏற்பட்ட அனுபவங்கள்.

MCW 13:24

தமிழாக்கம் ஸ்ரீரங்கம் - ஆர். குப்புசாமி

# சாவித்ரி காவியம் குறித்து ஸ்ரீ அரவிந்தர்

சாவித்ரி, சத்யவான் பற்றிய கதையானது, அன்புக்குரிய சதிபதிகளுக்கான, மரணத்தை வென்று வெற்றி கொள்வதற்கான, ஓர் பகுதியாக மஹாபாரதத்தில் கூறப்பட்டுள்ளது ஆகும். மேலும் இந்த வரலாறு மனித சமுதாயத்தில், புராண கதைகளுடன் கூடிய, வேதகால சம்பந்தப்பட்ட கதைகளாகவும், பல இடங்களில் வர்ணிக்கப்பட்டுள்ளது.

சத்தியவான் இறையுணர்வுடன் கூடிய உண்மையைத் தன்னகத்தே கொண்டிருந்த சமயம், எதிர்பாராத விதமாக “அறியாமை“ மற்றும் “மரணத்தின்” பிடியில் சிக்க நேர்ந்தது.

சாவித்ரி என்பதானது ஒரு தெய்வீகச் சொல். சாவித்ரி சூரியனின் மகள். மிகவுயர்ந்த உண்மையுடன் கூடியவளாக, தவசீலரும், குதிரைகளின் அரசனும், உயர்ந்த எண்ணம் கொண்ட தெய்வமும்; பௌதீக உடலுடன் கூடிய தந்தையுமான “அஸ்வபதியின்” மகளாக, புனிதத்தன்மையுடன் கூடிய, ஒருமுனைப்படுத்தப்பட்ட சக்தியுடன் கூடிய, இறப்பிலிருந்து அழிவின்மைக்குப் பிரயத்தனம் செய்யப்பட்டு, உதவிபுரிவதற்காக இப்புவியில் அவதரித்தவள்.

விருந்தோம்பலில் பெயர் பெற்ற பேரரசன் “த்யூமசேனர்” சத்யவானின் தந்தை. இவர் சுவர்க்கத்துக்கு ஒப்பான சாம்ராஜ்யத்தைத் தனது பார்வையற்ற நிலையின் காரணமாக இழந்ததோடு, அதன் மகிமையையும் இழந்தார். இவைகளெல்லாம் ஓர் உருவகமானதோ அல்லது விசேஷ குணங்களுடன் கூடியதாக உருவாக்கப்பட்ட பாத்திரங்களோ அல்ல.

ஆனால் தன்னிறையுள்ளவர்களுடன், நாம் உறுதிபடைத்த தொடர்புடன் மனித உருவெடுத்து, அவர்களுக்கு அழிவிலிருந்து, தெய்வ உணர்வுடன் கூடிய அழிவற்ற நிலையைப்பெறுவதற்கு உதவுவதற்காகவுமே உருவாக்கப்பட்ட அவதாரங்களாகும்.

*-சாவித்ரி- ஆசிரியர் குறிப்பு.*

# ஸ்ரீ அரவிந்தர் என்றொரு பேராசான்

*பிரேமா நந்தகுமார்*

முனைவர் பிரேமா நந்தகுமார் அவர்கள் புகழ்வானில் முழுநிலவாகத் திகழ்பவர். அவர் தம் முனைவர் பட்டத்திற்காகச் சமர்ப்பித்த ஆய்வுக்கட்டுரைக்கு அவர் தேர்வு செய்த பொருள், ஸ்ரீஅரவிந்தரின் சாவித்ரியுடன் தாந்தேயின் டிவைன் காமெடி (Divine Comedy)-யை ஒப்பீடு செய்வதாக அமைந்த சிறப்பு குறிப்பிடத் தக்கது. இந்திய இலக்கியங்களில் அவருக்கிருந்த ஆழ்ந்த புலமை, ஸ்ரீஅன்னை, ஸ்ரீஅரவிந்தரின் எழுத்துகளில் அவருக்குள்ள ஈடுபாட்டுடன் கூடிய புலமை இவற்றுடன், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் உள்ள பன்மொழிப் புலமை என்னும் இவையாவும் அவரைச் சிறந்த எழுத்தாளராகவும், சிறந்த பேச்சாளராகவும் திகழச்செய்கிறது. பிப்ரவரி 2003-ல் அவர் நமது சாவித்ரிபவனுக்கு வருகை தந்து ஆங்கிலத்திலும், தமிழிலுமாக இரு உரைகள் நிகழ்த்தினார். அதுபோது அவருடைய எளிமைத் தன்மையும், உயர்உணர்வுடன் கூடிய நகைச்சுவைத் திறனும் புலனாயின. அவர் நிகழ்த்திய ஆங்கில உரை நமது ஆங்கில இதழ் Invocation-(no.19)-ல் வெளியிடப்பட்டது. அவர் நிகழ்த்திய தமிழ் உரையினை நமது சாவித்ரிபவனின் தமிழ் இதழான “பிரார்த்தனா“வின் முதல் இதழில் வெளியிடக் கிடைத்தமையை எண்ணி நாங்கள் நன்றிப் பெருக்கால் நெகிழ்கிறோம்.

*ஏற்றி மனத்தெழில் ஞானவிளக்கை இருளனைத்தும்*
*மாற்றின வர்க்கொரு கைம்மாறு மாயனும் செய்யகில்லான்*
*போற்றியுகப்பதும் புந்தியிற் கொள்வதும் பொங்கு புகழ்*
*சாற்றி வளர்ப்பதும் சற்றல்லவோ முன்னம் பெற்றதற்கே.*

*வேதாந்த தேசிகர்*

கண்ணனே கூட தனது ஆசிரியர் சாந்தீபனி முனிவருக்குத் தான் எவ்வாறு கைம்மாறு செய்வது என்றறியாமல் திகைத்ததாக வேதாந்த தேசிகர் கூறுகிறார். ஸ்ரீ அரவிந்தர் நமக்கருளிய நல்வழிக்கு நாம் எப்படித்தான் நன்றி கூறமுடியும்?

மகாயோகியை மகிழ்ச்சியுடன் போற்றுவதையும், அவருடைய எழுத்துகளை மனதில் பதித்துக்கொள்வதையும், ஸ்ரீ அரவிந்த வாணியைப் பரப்புவதையும் நமது வாழ்க்கையின் இலட்சியமாகக் கொள்வதன் மூலம் ஒரு சிறிதளவு நமது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளமுடியும்.

ஸ்ரீ அரவிந்தரை நினைப்பதே ஓர் ஆனந்தம். இப்படியுமொரு பெருமான் நம்மிடை வாழ்ந்திருக்கிறார்! நமது வாழ்க்கையைச் செம்மையாக, யோகமாக வாழச் சொல்லிக் கொடுத்த பெருமான்!

இவரிடம் நாம் பெற்ற பாடங்களில் தலையாயது தேசபக்தி. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வந்தேமாதரம் எனும் சொற்கள் இத்தேசமக்களை எழுச்சிபெறச் செய்யும் தாரக மந்திரமாகும் என்று முழங்கியவர். ஸ்ரீ அரவிந்தர் தமக்கு பாரதம், ஒரு உயிர்ப்புள்ள தாய் என்பதை தன் மனைவி திருமதி மிருணாளினிக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடுகிறார்:

சாமான்யமாகப் பலர் இந்த நாட்டை வெறும் மைதானங்களும், வயல்களும், காடுகளும், குன்றுகளும், நதிகளுமுடையதோர் உயிரற்ற பொருளாகக் கருதுகிறார்கள். நான் இதனைத் தாயாக அறிந்திருக்கின்றேன். தாயாகவே அவளை மதித்துத் தொழுகின்றேன். தாயின் மார்பிலே ஓர் அசுரன் வந்து உட்கார்ந்து கொண்டு அவளது இரத்தத்தை உறிஞ்சுவானானால், அப்பொழுது மகன் என்ன செய்வான்? கவலையேதுமின்றித் தான் சோற்றின் முன்னாலிருந்து கொண்டு தனது மனைவி மக்களுடன் மகிழ்ச்சியிலே நேரத்தைக்கழிப்பானா? தனது தாயை இரட்சிக்க வழி தேடுவானல்லவா?

வீழ்ச்சியடைந்து போயிருக்கும் இந்த நாட்டைக் காப்பாற்றும் வல்லமை எனக்கு உண்டென்பதை நான் அறிந்திருக்கிறேன். எனக்குச் சரீர பலமில்லாதிருக்கலாம். நான் வாளேனும் துப்பாக்கியேனும் கொண்டு போர் செய்யப்போவதில்லை. ஆனால் அறிவின் பலத்தால் யுத்தம் நடத்தப்போகிறேன்.

*(மொழிபெயர்ப்பு: சுப்பிரமணிய பாரதியார்)*

தமிழர்களாகிய நாம் ஸ்ரீ அரவிந்தரின் தேசபக்திக்கனலை சிறப்பாகவே புரிந்து கொள்ளமுடியும். ஏனெனில், அவரது கட்சியைச் சேர்ந்த பாரதியார், இதே பாணியில் உணர்ச்சி பொங்கும் தேசபக்திப்பாடல்களை எழுதியிருக்கிறார்.

*சாகும் பொழுதில் இருசெவிக்குண்டலம்*
*தந்ததெவர் கொடைக்கை? சுவைப்*
*பாகுமொழியிற் புலவர்கள் போற்றிடும்*
*பாரத ராணியின் கை.*

*போர்க்களத் தேபர ஞானமெய்க்கீதை*
*புகன்ற தெவருடை வாய்? - பகை*
*தீர்க்கத் திறந்தரு பேரினள் பாரத*
*தேவி மலர்த் திருவாய்.*

இந்த பக்தியைத் தொண்டின் மூலம், நம் கையே நமக்குதவி என்றிருப்பதன் மூலம் வளர்க்கவேண்டும். எதற்கெடுத்தாலும் அரசாங்கமே உதவவேண்டும் என்று நினைப்பது சுயமுனைப்பின் கேடு என்றார். இதன் காரணமாக ஒருவருக்கு ஒருவர் உதவுவது, ஒப்புரவு முதலிய நன்னெறிகள் மக்களிடமிருந்து அகன்றுவிட்டனவே என்று வருந்தினார். எனக்கு என் கவலை, என் சகோதரன் படும் பாட்டினை அரசாங்கம் கவனித்துகொள்ளட்டும் என்று நினைப்பதே மடமையன்றோ? ஒருவருக்கொருவர் காட்ட வேண்டிய அன்பு வற்றிவிடக்கூடாது. கிராம சமிதிக்கள் மூலம் உதவும் மனப்பான்மையை வளர்க்கவேண்டும் என்று ஸ்ரீ அரவிந்தர் விரும்பினார். இந்தியர்கள் அயல்நாடு சென்று கற்றுக்கொண்டதைத் திரும்பி வந்தபின் உபயோகித்து தாய்நாட்டின் மேன்மைக்காக உழைக்கவேண்டும் என்றார். 1907 ஆம் ஆண்டு, ஆகஸ்டு 22

ஆம் தேதி பெங்கால் தேசியக்கல்லூரி மாணவர்கள் முன்பு ஆற்றிய சொற்பொழிவு இன்றைய சூழ்நிலைக்கும் பொருந்தும்:

"ஒரு நாட்டின் சரித்திரத்திலே சில நேரங்களில் தெய்வம் மக்கள் முன் ஒரு முக்கிய கடமையை வைக்கிறது. அதற்காக எவ்வளவு உயர்ந்த இலட்சியங்களை நாம் கொண்டிருந்தாலும், அவற்றை மறக்க வேண்டும். அது போன்றதொரு நிலைமை நம் தாய் நாட்டிற்கு இப்பொழுது வந்திருக்கிறது. அவள் சேவையே இப்பொழுது மிகவும் முக்கியம். நமது அனைத்து சக்திகளும் அதற்கே செலவிடப்படவேண்டும். நீங்கள் கல்வி கற்பதானால் அவளுக்காக கற்கவேண்டும்: உங்களது உடல், மனம், ஆவி முழுவதும் அவளது சேவைக்காகத் தயாராகட்டும். நீங்கள் சம்பாதிப்பது அவளுக்காக வாழவேண்டும் என்பதற்காக. நீங்கள் வெளிநாடுசெல்வது, அறிவுச்செல்வம் ஈட்டுவது, தாய்நாட்டிற்கு சேவை செய்வதற்காகவே. அவள் உயரவேண்டுமென உழையுங்கள். அவள் மகிழ்வதற்காக கஷ்டங்களை ஏற்றுக்கொள்ளுங்கள்." இந்த ஒரு அறிவுரையில் அனைத்தும் அடங்கியுள்ளது.

ஸ்ரீ அரவிந்தர் தம் வாழ்க்கையில் இவ்வறிவுரையை வாழ்ந்துகாட்டி நம்மை ஆற்றுபடுத்தினார். தமது அனைத்தையும் தேச சேவைக்கு அர்ப்பணித்து, திருமாலின் திருவாழி போல் வங்கம், மாராஷ்ட்ரம், குஜராத் மாநிலங்களில் சுழன்று மக்களிடம் அபார விழிப்புணர்வை ஏற்படுத்தினார். வந்தேமாதரம் பத்திரிகை மூலம் சுதந்திரக்கனலை மூட்டினார். பிரிட்டிஷ் அரசாங்கம் அவரைச் சிறையிலடைத்தது. குறுகியதொரு இருண்ட அறையில் ஓராண்டு காலம் சிறை. ஆனால் ஆலகாலமுண்ட பரமசிவன் போன்று பதட்டமேதுமின்றி ஸ்ரீ அரவிந்தர் ஆன்மானுபவத்தில் ஈடுபட்டார். அவருக்காக வாதாடிய தேசபந்து சித்தரஞ்சன் தாஸ் அவர்கள் தமது சரித்திரப் பிரசித்தி வாய்ந்த உரையை பின்வருமாறு நிறைவு செய்தார்:

> கனவான்களே, நீங்கள் இதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். அதாவது இந்த விவாதம் சப்தமின்றி அடங்கியபின் நெடுங்காலம் வரையிலும், இந்தத் துன்பமும் இந்த கலக்கமும் ஓய்ந்து நெடுங்காலம் வரைக்கும் இம்மனிதன் இறந்துபோன காலத்திலிருந்து நெடுங்காலம் வரைக்கும், அவரைச் சுதேசாபிமானக் கவிராஜரென்றும், சுதேசியத்தின் நபிநாயகமென்றும் (தீர்க்கதரிசி) மானிட வம்சத்தின் அபிமானியென்றும் மனிதர்கள் பாராட்டுவார்கள். அவருடைய வசனங்களை இந்தியாவில் மட்டுமல்ல, தூரதேசங்களிலும் கடலுக்கப்பாலுள்ள நாடுகளிலும் திரும்பத் திரும்ப எதிரொலிக்கும்படி சொல்லி கொண்டே இருப்பார்கள். ஆகையால் அவர் சரித்திரத்தின் உன்னதமான நியாய

பீடத்தின் முன் நிற்கிறார். சரித்திரத்தின் தீர்ப்பு உங்கள் தீர்ப்பை எதிர்பார்க்கிறது.

*(மொழிபெயர்ப்பு: சுப்பிரமணிய பாரதியார்)*

சிறையிலிருந்து விடுதலை பெற்றபின் அயர்வின்றி மக்களிடம், அவர்களது பண்டைய மேன்மை பற்றி எடுத்துக்கூறி, அவர்களது ஆற்றல்களைப் பெருக்க வேண்டுமென்று, கர்மயோகின் எனும் ஆங்கிலப் பத்திரிகையைத் தோற்றுவித்தார். இப்பத்திரிகையின் அட்டைபடத்தில் கீதோபதேசம்: தலை வாசகம்: செயற்திறமையே யோகம் (யோக: கர்மஸுகௌஸலம்). உடன் தர்மா எனும் வங்காளி பத்திரிகையும் வெளியிட்டார். கர்மயோகம் செய்வதற்கு முன்னுரையாக இளையபாரதத்தினருக்கு ஒரு துர்கா ஸ்தோத்திரமும் எழுதினார். மகாபாரத்ததில் யுத்தம் தொடங்குமுன் கண்ணன் அர்ஜுனனிடம் துர்கையை வணங்குமாறு சொல்கிறான். அர்ஜுனனும் உடனே இரதத்திலிருந்து கீழிறங்கி கைகளைக்கூப்பிக்கொண்டு சிறந்ததொரு துதியை செப்புகிறான். ஒரு சில வரிகள்:

*ஸாவித்ரீ வேதமாதாச ததா வேதாந்த உச்யதே*
*ஸ்துதாஸிதம் மஹாதேவீ விசுத்தேனாந்தராத்மனா*
*ஜயொபவதுமே நித்யம் த்வத்ப்ரஸாதாத் ரணாஜிரே*
*சாந்தாரமய துர்கேஷு பக்தானாம் காலனேஷுச*
*நித்யம் வஸஸி பாதாளே யுத்தே ஜயஸிதானவான்*
*த்வம் ஜமானி மோஹினீ சமாயாஹ்ரீ ஶ்ரீஸ்ததைவ ச*
*ஸந்த்யா ப்ரபாவதி சைவ ஸவித்ரீஜனனீ ததா*

ஶ்ரீ அரவிந்தரும் அச்சம், மடமை, மூடநம்பிக்கை, சோர்வு, கர்வம், டாம்பீகம், தாய்நாட்டினைப்பழித்தல் போன்ற எதிரிகளிடம் யுத்தம் தொடுக்க ஆரம்பித்ததால், இப்புதிய குருகேூத்திரப் போருக்காக ஒரு அற்புதமான துர்க்கை துதியினை இயற்றினார்:

*மாத துர்கே மஹா சக்தே கராளே ஸிமஹ்வாஹினீ*
*மாத: சிவப்ரியே தேவி சர்வசக்திப்ரதாயினி*
*தவ சக்த்யாம் சஜா மாத: யுவானோ பரதாவனே*
*த்வன்மந்திரே ஸமாஸீனா: த்வாம் வயம் ப்ரார்தயாமஹே*
*ச் ருணு மாத: ப்ரகாசஸ்வ ஸமார்வியவ பாரதே.....*

தனது சிறந்த எழுத்துகள் மூலம் நம் நாட்டுமக்களுக்கு கீதாசாரியனாக விளங்கிய ஶ்ரீ அரவிந்தர் 1910 இல் புதுச்சேரி வந்தபின், உலகினுக்கே ஆசானாக ஆனார். 1914-இல் புதுச்சேரி வந்த பால் ரிஷார், மிரா ரிஷார் தம்பதியருடன் ஆர்யா பத்திரிகையைத் துவங்கினார். இப்பத்திரிகையில் ஆறு ஆண்டுகள் தவயோகியாக அவர் எழுதிவந்த கட்டுரைகளே இன்று உலகெங்கும் ஒளியினை பாய்ச்சுகின்றன, ஒளிமிகு பாதையினைக் காட்டுகின்றன, ஒளிசேர்

நெறியில் நம்மை நடத்திச்செல்கின்றன. சனாதன தருமத்தினைத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன:

வைணவ உரையாளர், திருக்குருகைப் பிரான்பிள்ளான் ஆறாயிரப்படியில் கூறுவார்: ஞானவான்களுடைய வசனத்தையும் அனுஷ்டானத்தையுமன்றோ பிரமாணமாகச் சொல்கிறது?

ஆம், ஸ்ரீ அரவிந்தரின் வசனமும் அவரது அனுஷ்டானமும் நமக்குப் பிரமாணம். அவரது நூல்களை எங்கு திறந்தாலும் நமக்கு ஒரு நல்ல பாடம் இருக்கும். அன்பு நிறைந்த ஆசான் மெல்ல நம்மை அறிவுச்சோலையில் அழைத்துச் செல்வது தெரியும். நமது கலாச்சாரத்தினைப் பற்றி நாம் மறந்துவிட்டபோது, மூடநம்பிக்கைகளில் இழிந்து, நமது உயர்ந்த பண்பாட்டினை நாம் சாடியபோது, ஸ்ரீ அரவிந்தரின் இந்தியப்பண்பாட்டின் அடித்தலங்கள் என்னும் நூல் எவ்வளவு அழகாக நமது அறிவுக்கண்களைத் திறந்தது. வேதகால பாரம்பரியம் என்ன, இராமாயணமும் பாரதமும் பாரதத்தினை ஒருமைப்படுத்தியதென்ன, கம்பனும் வள்ளுவரும் படைத்த உயரிலக்கியம் என்ன, நமது கோவில்கள், கற்சிலைகள், செம்பு வார்ப்புகள், ஓவியங்கள் என்று பாரதம் கண்ட பன்முகப்பெருமையென்ன, நமது அரசியல், சமூகம் அனைத்தும் பெற்ற ஏற்றமென்ன என்று அவர் பூத்தொடுத்த மாதிரி சொல்லிக்கொண்டு போகும்போது, நம் நெஞ்சமும்



*டாக்டர். பிரேமா நந்தகுமார் பிப்ரவரி 16, 2003ல்*
*சாவித்திரி பவனில் உள்ள மரங்களின் கீழே உரையாற்றுகிறார்*

*வண்மையிலே யுளத் திண்மையிலே - மனத்*
*தண்மையிலே மதி நுண்மையிலே*
*உண்மையிலே தவறாத புலவர்*
*உணர்வினிலே யுயர் நாடு - இந்தப்*
*பாருக்குள்ளே நல்ல நாடு - எங்கள் பாரத நாடு*
*என்று பாரதி பாடலைப்பாடுகிறதே!*

அதே நேரம் ஸ்ரீ அரவிந்தர் பழம்பெருமை மாத்திரம் பேசவில்லை. நல்ல ஆசான் மழைமேகம் போலிருக்கவேண்டும் என்று பெரியோர்கள் சொல்வதுண்டு. மேகம் தரையிலிருக்கும் நீரை உறிஞ்சினாலும், அதிலுள்ள தீமைகளைக் களைந்து தெள்ளிய நீரையே நமக்குத் தருவதுபோல, ஆசான் தான் சேர்த்த அறிவினில் நல்லது வைத்துக்கொண்டு அல்லதைக் களையவேண்டும். ஸ்ரீ அரவிந்தரும் தீண்டாமை, சாதி பாகுபாடு மற்றும் சாதி வெறி போன்ற தீமைகளை விலக்குமாறு அறிவுறுத்தினார். அறிவு என்பது தனியொரு சாதியின் சொத்தல்ல. சௌனகன் எனும் இல்லறத்தானும், ஜனஸ்ருதியென்னும் செல்வந்தனும், வண்டிக்காரனும் அறிவில் சிறந்து விளங்கினாரன்றோ? இது காரணமாக, உலகம் அனைத்துமே தெய்வ மயம் (ஈசாவாஸ்பமிதம் ஸர்வம்) என்று அறைகூவும் ஈச உபநிஷத்தில் ஸ்ரீ அரவிந்தருக்கு தனிப்பட்ட ஈடுபாடு இருந்தது. பொருளற்ற சடங்குகளை அவர் வரவேற்கவில்லை.

தெய்வீக வாழ்க்கை (The Life Divine), யோக ஒருமைப்பாடு (The Synthesis of Yoga), வேதங்கள் பற்றி (On the Veda), கீதை பற்றி வியாசங்கள் (Essays on the Gita) மற்றும் மானுட ஒற்றுமை எனும் இலட்சியம் (The Ideal of Human Unity) போன்ற அற்புதமான நூல்களை நமக்கு அளித்திருக்கும் இப்பேராசானுக்குக் கைம்மாறு செய்வதுண்டோ? நமது பேராசானின் நூல்களில் சூடாமணியாக விளங்குவது சாவித்திரி மகாகாவியம். பூரணயோகியாக அவர் பொலிந்து நின்றபோது எழுதிய வேதம். தெய்வீக வாழ்க்கைநெறியை நம்முன் காட்டும் போதிமரம். தெய்வத்தின் தீண்டுதல் இருப்பின் அனைத்தும் சாத்தியம் (all things can be done if the God-touch is there) என்று தைரியம் கூறும் வீரவிளக்கு. இன்று நம்மைச் சூழ்ந்துள்ள அவலங்கள், பயங்கரங்களை எடுத்துக்காட்டி, இவற்றுக்கு அடிமையாக வேண்டாம் என்று கண்டிக்கும் அறநெறிச்சாரம். ஸ்ரீ அரவிந்தர் இளைய பாரதத்திடம் கொண்டிருந்த அபாரமான நம்பிக்கையை அசுவபதிமூலம் தெரிந்து கொள்ளுகிறோம். வருங்கால் இளைஞர்களே தெய்வத்தின் கனல் தெறிக்கும் முன்னோடிகள், தெய்வீகசாதியின் தோற்றமாகப் பொலிபவர்கள், மானுட வாழ்வினை ஏற்று செயற்கரியன செய்பவர்கள், அற்புதமான உதயசூரியனின் ஒளிபடைத்த கண்களை உடையவர்கள், அமைதியாக உழைப்பவர்கள், தடைகளை வென்று விதியினை மாற்றியமைப்பவர்கள், தெய்வத்தின் சுரங்கங்களில்

செயல்படுபவர்கள், விதியுடன் போராடுபவர்கள், அமரத்தன்மைக்கு உருவம் சமைப்பவர்கள் என்றெல்லாம் இளம் இலட்சயவாதிகளை ஊக்குவிக்கின்றார்:

*"I saw the Omnipotent's flaming pioneers*
*Over the heavenly verge which turns towards life*
*Come crowding down the amber stairs of birth;*
*Forerunners of a divine multitude,*
*Out of the paths of the morning star they came*
*Into the little room of mortal life.*
*I saw them cross the twilight of an age,*
*The sun-eyed children of a marvellous dawn,*
*The great creators with wide brows of calm,*
*The massive barrier-breakers of the world*
*And wrestlers with destiny in her lists of will,*
*The labourers in the quarries of the gods,*
*The messengers of the Incommunicable,*
*The architects of immortality."*

இதுவே ஒரு உத்தமமான ஆசாரியன் செய்யவேண்டியது. நல்ல ஆசான், "காலம் கெட்டுப்போச்சு, நீ உருப்படமாட்டாய், இந்தக்காலத்துப்பசங்கள் எல்லாம் உதவாக்கரை" என்று கூறுவதில்லை. மாறாக, இளைஞர்கள் முன்பு இலட்சியங்களை வைத்து உற்சாகப்படுத்துவான். இன்றைய அவல வாழ்வினைத் தெய்வீக வாழ்க்கையாக மாற்றியமைக்கமுடியும் என்று ஸ்ரீ அரவிந்தர் தெளிவாகக் கூறி அகற்கான வழி காட்ட சாவித்திரி காவியத்தை நம்முன் வைத்தார்.

நாமும் அவரை வணங்கி, அவரது மந்திரவாக்குகளை அன்றாட உண்மையாக்குவோம். அவரது தெய்வீக ரோஜா (Rose of God) எனும் பாடல் அப்படியொரு மந்திரத்தை நம்முன் வைக்கிறது:

*தெய்வீக ரோஜாவே, அனந்தத்தின் ஆனந்தக்கீற்றே,*
*அன்பெனும் ரோஜாவே, ஆன்மாவின் ஆழமே, அருளே!*
*இயற்கையின் ஆர்வமெனும் இதயத்திலிருந்து எழுவாய்!*
*உலகினை அற்புதத்தின் களனாக்கி, வாழ்வினை மலர்விப்பாய்!*
*(மொழி பெயர்ப்பு: பிரேமா நந்தகுமார்)*

*Rose of God. like a blush of rapture on Eternity's face,*
*Rose of Love, ruby depth of all being, fire–passion of Grace!*
*Arise from the heart of the yearning that sobs in nature's abyss:*
*Make earth the home of the Wonderful and life beatitude's kiss."*

*(SABCL 5:584)*

# "சாவித்ரி" வண்ண ஓவிய வடிவில் - ஸ்ரீஅன்னையின் பார்வையில்

1961-ம் ஆண்டு ஸ்ரீ அன்னை குஜராத்தைச் சேர்ந்த பெண் சாதகி ஒருவருக்கு "ஹூதா" "அர்ப்பணிக்கப்பட்ட" என்ற பொருள் படைத்த பெயரை கொடுத்து, ஸ்ரீ அரவிந்தரின் காவியமான "சாவித்ரி"யின் மேற்கோள்களுக்குத் தகுந்தவாறு கற்பனை நிறைந்த சித்திரம் வரைதலைத் தொடங்கினார்.

1956-ம் ஆண்டிலிருந்து ஹூதாவுக்கு வண்ணம் தீட்டும் கலையைப் பழக்கி வந்தார். ஸ்ரீ அன்னை பாரீஸில் இளம் பெண்ணாக ஒரு திறமை வாய்ந்த ஓவியர் மற்றும் பாடகியாக இருந்த பொழுது, வண்ணம் தீட்டுவதையும் பயின்றார். ஸ்ரீ அன்னையும், ஸ்ரீ அரவிந்தர் அவர்களும் இப்புவியுலகத்தில் ஒரு புதிய உணர்வை வெளிப்படுத்தி, அதை நிர்மாணிக்க, தங்களது வாழ்க்கையை அர்ப்பணித்து கலைக்கு ஒரு முக்கியத்துவம் கொடுத்தார்கள். ஹூதா பிறப்பதற்கு முன்பே, ஸ்ரீ அன்னை பல நபர்களிடம் இதை முயற்சி செய்ததாக ஹூதாவிடம் கூறியுள்ளார். ஸ்ரீ அன்னை, ஏற்புத்திறனுள்ள சரியான ஒருவரைக் கண்டு, அவர் மூலமாக, தனது சுயமான எதிர்பார்ப்பை வண்ணம் தீட்டிய சித்திரமாக செய்ய விரும்பினார்.

ஸ்ரீ அன்னை அது எவ்வாறு செயல்பட்டது என்பதை விளக்குகிறார்:-

"நாங்கள் எளிய முறையில் இணைந்து தேர்ந்தெடுக்கப்பட்ட வரிகளில் தியானம் செய்யும் பொழுது, அதன் தெளிவான உருவம் தெரியவரும்பொழுது, நான் ஓரிருகோடுகளால் விளக்குவேன். பிறகு ஹூதா அவரது சித்ர கூடத்துக்கு எடுத்துச்சென்று வண்ணம் தீட்டுவார்".

இருப்பினும், ஸ்ரீஅன்னை முழுமையாக வரையப்பட்ட சித்திரங்களைப் பார்ப்பார். அவைகளில் ஏதேனும் மாறுதல் செய்ய வேண்டியிருப்பின் அதைக் கூறுவார். அதன்பிறகே ஸ்ரீ அன்னை திருப்தி அடைவார். "சாவித்ரியில் தியானம்" என்ற நான்கு பகுதிகளை 1962-1965 வரை, புத்தகம் ஒன்று; அதன் காவியப்பகுதிகள் ஒன்று முதல் ஐந்து (Book I canto I - V) வரை சித்திரமாக வரைந்து புத்தகவடிவில் வெளியிட்டுள்ளார்கள். ஹூதா அவைகளில் பலவற்றை மறுபடியும் வண்ணம் தீட்டியதோடு "சாவித்ரி" காவியத்தின் முழுமையையும் 468 சித்திரங்களாக வரைந்து 1967 பிப்ரவரியில் ஸ்ரீ அரவிந்தாஸ்ரமத்தில் காட்சிக்கு வைத்திருந்தார்.

இந்தப்பணி நடந்த சமயம் ஸ்ரீஅன்னையால் சாவித்ரியிலிருந்து வாசிக்கபட்ட அனைத்துப் பகுதிகளையும் சித்திரங்களுக்கேற்ப ஒலி நாடாவில் பதிவு



*சாவித்திரி - அன்னையினால் வரையப்பட்டது*

*© Huta D. Hindocha*

செய்துமுள்ளார். நாரதர் என்று ஸ்ரீ அன்னையால் பெயர் கொடுக்கப்பட்ட ஆரோவில் வாசியான "ரிச்சர்ட், எக்கன் பெர்னுர்" என்பவரால் தயாரிக்கப்பட்ட, திரையில் காட்டப்படும் ஒளிக் கண்ணாடி (Slide-show) காண்பிப்பதற்குப் பின் புலமாக ஸ்ரீ அன்னை அவர்களால் வாசிக்கப்பட்டுள்ள வாத்திய இசையுடன் கூடிய ஒலி நாடா உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.

பிறகு மற்றுமொரு ஆரோவில் வாசியான "மைக்கேல் க்ளோஸ்டர்மேன்" என்பவர் "சாவித்ரியின் தியானம்" என்று ஒரு படச்சுருள் தயாரிக்க ஸ்ரீஅன்னை ஆசிவழங்கியுள்ளார். சமீபத்தில் அவர் சாவித்ரி காவியத்தின் 12 புத்தகங்களையும் கொண்ட சித்திரங்களைப் பூர்த்தி செய்து அது ஒளிநாடாவில் (video) கிடைக்கிறது. ஆஸ்ரமவாசியான சுனில் பட்டாச்சாரியா அவர்களிடம் ஸ்ரீஅன்னையின் சாவித்ரி வாசிப்புகளடங்கிய (ஹுதா அவர்களால் பதிவு செய்யப்பட்ட) ஒலி நாடாக்கள் அதற்கேற்ப சங்கீதத்துடன் கூடிய இசையாகத் தயாரித்து அளிக்கக் கொடுக்கப்பட்டது. சுனில் பட்டாச்சார்யா தனது புவிவாழ்க்கையை (இந்த ஆண்டு தொடக்கத்தில்) துறக்கும் வரை பணியைத் தொடர்ந்து, புத்தகம் ஒன்பது மற்றும் 10-ல் பகுதியுமே முடிந்துள்ளார்.
தொடக்கத்தில் ஹுதா அவர்களுக்குச் சில விபரமான சித்திரங்களைக் கொடுப்பதுடன் ஒவ்வொரு படத்தையும் தயாரிக்க வழிவகுத்துக் கொடுத்தும், சம்பந்தப்பட்ட குறிப்புகளுடன் கூடிய நிபந்தனைகளையும் அந்தந்த வரிவடிவங்களில் எழுதியும் கொடுத்துள்ளார். படிப்படியாக ஹுதா ஏற்புத்திறன் அதிகம் பெற்று அனுபவம் அடைந்து வந்ததினால் ஸ்ரீ அன்னையின் வரிவடிவங்கள் அதிகமாகவும், முழுமையாகவும், தெளிவாகவும் வரையத் தேவையில்லாமல் ஆயிற்று. ஹுதா ஒருவருக்கு மட்டுமே அறிந்து கொள்ளும் வகையில் புத்தகம் ஐந்து முதல் உள்ள வரிவடிவங்கள் மிகவும் தெரியவந்த நிலையிலிருப்பினும், ஸ்ரீ அன்னை எதை எதிர்பார்க்கிறார் என்பதை முன்னமேயே விவரித்துள்ளதால் அது அவ்வாறு சரியாக வரையப்பட்டது. அவைகளில் பெரும்பாலானவை காகித பென்ஸிலாலும், சில கலர் சாக்கட்டிகளாலும், மிகச் சில மையினாலும் வரையப் பெற்றிருந்தன. அவைகள் பல்வேறு தரப்பட்ட காகிதங்களிலும், பல அளவுகளிலும், சில இரண்டு அங்குல சதுரத்திலும், பெரியது எனக் கூறப்படுவதானது ஒரு முழுக்காகிதத்தின் பாதியிலும் இருந்தன.

ஒரு சமயம் ஹுதா அவர்கள் இந்த வரை படங்களை வெளியிடுவதற்கு ஸ்ரீ அன்னையிடம் வேண்டினார். அதற்கு ஸ்ரீ அன்னை கூறிய பதில்:

“ஆ! நல்ல உணவு பரிமாறப்படும் போது, அது எவ்வாறு சமைக்கப்பட்டது என கூறக் கூடாது. அது போல நாம் வரிவடிவங்களை அச்சிடுவதோ அல்லது வரைபடம் எப்படி செயலாக்கப்பட்டது என்பதை வெளியிடுவதோ கூடாது. மக்கள் தாங்களாகவே அதைக்கண்டு பிடிக்க வேண்டும்”.

எத்தனையோ “பொக்கிஷங்கள்” ஸ்ரீ அன்னை அவர்களால் ஹுதா அவர்களுக்குக் கொடுக்கபட்டிருந்தும், ஹுதா அவர்கள் இந்த (400-க்கும் மேற்பட்ட) சித்திரங்களை மிகவும் பாதுகாப்பாக வைத்திருந்ததால், முப்பது ஆண்டுகளுக்குப் பிறகும் கூட தற்சமயம் புதுப்பொலிவுடன் ஸ்ரீஅன்னை வரைந்த நிலையிலேயே உள்ளதைப்பார்க்க முடிகிறது.

தற்பொழுது “சாவித்ரி பவனுக்கு” அவைகளின் நகல்களை எடுத்துக்கொள்ளவும், வண்ணம் தீட்டப்பட்ட ஓவியங்களை முற்றிலும் பிரதி எடுத்துக் கொள்ளவும் அனுமதித்துள்ளார்.

நாங்கள் அவைகளில் முப்பது படங்களாகிய முதல் ஐந்து பகுதிகளான முதற் புத்தகத்திற்கானவற்றை “சாவித்ரிபவன்” நான்காவது ஆண்டு தொடங்கியதும் “சாவித்ரிபவனின்” திட்டங்களின் முதற்கட்ட தொடக்க சமயமானதுமான நவம்பர் 1998 முதல் “பிதங்கா கூடத்தில்” ஆரோவில்லில் காட்சிக்கு வைத்துள்ளோம்.

# சாவித்ரி - குறித்த விபரம்

20.12.1967 காலை ஸ்ரீஅன்னை அவரது இசை மற்றும் பேட்டிகாணும் அறையில் என்னைப்பார்த்ததும், என்னிடம் கீழ்க்கண்டவாறு கேட்டார்கள்.

> *“என்னிடம் காண்பிப்பதற்காக ஏதேனும் கொண்டு வந்துள்ளாயா?”*

உடனே விடையளித்தேன். ஆம் அன்னையே! 10.2.1967 அன்று *“சாவித்ரியில் தியானம்”* என்ற தலைப்பில் சாவித்ரி பகுதிகளிலிருந்து எடுத்து 465 பகுதிகளுக்குத் தங்களால் எடுத்துரைக்கப்பட்ட சாவித்ரிக்கான சித்திரங்களின் கீழ் எழுதப்பட்டு, கண்காட்சியில் வைக்கப்பட்டதைக் கொண்டு வந்துள்ளேன். அன்னையே தயவு செய்து இந்தப்பகுதிகளை எனக்கு விளக்கிக் கூறுவதுடன், அதைத் தாங்கள் ஏற்கனவே கூறும்பொழுது ஒலிநாடாவில் பதிவு செய்தது போல் பதிவு செய்து கொள்ளட்டுமா? இதனால் மக்கள் சாவித்ரிக்கான ஓவியங்களைப் புரிந்துகொள்ள இயலும் என மேலும் கேட்டேன்.

சில வினாடிகள் ஒருமுனைப்பட்டிருந்து விட்டு பிறகு மிகவும் ஆர்வத்துடன் பதில் கூறினார்கள்:

> *“நான் இந்தப்பகுதிகளை விளக்க வேண்டுமெனில், தொடக்கத்திலிருந்தே தொடங்கி அதற்கான முழுமையான விளக்கங்களை “சாவித்ரி பற்றி” கூறுவதே நல்லதென எண்ணுகிறேன்”.*

உண்மையிலேயே நான் 10.2.1955-ல் வந்து ஸ்ரீஅன்னையுடன் தங்குவதற்கு முன்பே, இந்த எண்ணம் ஸ்ரீஅன்னையின் தொலைநோக்குப் பார்வையில் திட்டமிடப்பட்டிருந்தது. சாவித்ரியின் முதல் பிரதி 1954-ல் ஸ்ரீஅரவிந்தோ இண்டர் நேஷனல் செண்டர் ஆ.்.ப் ஏஜுகேஷன் வாயிலாக வெளியிடப்பட்ட விபரங்களை, அன்னை, சில சாதகர்கள் அடங்கிய குழுவில் தெரிவித்ததை திரு. அமல்கிரண் வெளியிட்டார்.

> “சாவித்ரி ஓர் இரகசியமானதும், தெய்வரீதியானதுமான ஓர் அனுபவம். அதன் சில பகுதிகளை மனதினால் புரிந்து கொள்ளமுடியும். இருப்பினும், அது சம்பந்தமான அறிவும், அனுபவமும் அதைப்புரிந்துகொள்ள அதிகம் தேவை. என்னைத்தவிர எவராலும் இந்த சாவித்ரியை விளக்க இயலாது. ஒருநாள் நான் இதை உண்மையான உணர்வுடன் விளக்க இயலும் என நம்புகிறேன்”.

18.1.1968 காலை நானும் ஸ்ரீஅன்னையும் சாவித்ரி சம்பந்தமான பணியைத் தொடங்கினோம். 28.1.68 அன்று ஸ்ரீஅன்னை புதிய செயல்பாட்டுக்கான பெயரை "சாவித்ரி குறித்து" என தெரிவித்தார்கள்.

இது குறித்து நாங்கள் எவ்விதம் செயல்பட்டோம் என்பதைக் கூறுகிறேன்:- ஸ்ரீஅன்னை சாவித்ரியின் பகுதிகளை படித்து சிலநேரம் ஆழ்ந்த சிந்தனைக்குப் பிறகு தனது கருத்துக்களை கூறும்பொழுது, எனது ஒலிநாடாக்களில் பதிவு செய்து கொண்டு அதன் பிறகு அதை எடுத்து எழுதுவேன். ஸ்ரீஅன்னையின் கட்டளைக் கிணங்க சாவித்ரி வரிகளுக்கான வரை படங்களைத் தயார் செய்வேன்.

இது போல ஸ்ரீஅன்னை, ஸ்ரீஅரவிந்தர் அவர்களின் திரையிடப்படாத தொலைநோக்குப் பார்வைகளையும், தனது உள்ளார்ந்த பார்வையையும் ஒன்று சேர்த்து, புதிய உலகில் காணக்கூடிய அதிமன ஒளி, அதிமன உணர்வு, அதிமன சக்தி மற்றும் அதிலுள்ள பூரிப்பு முதலியவற்றில் செயல்பட்டுக் கொண்டிருந்தோம். இந்தவுணர்வுகளைத் தனது உடலின் திசுக்களில் வெளிப்படுத்தினார்கள். சாவித்ரியின் சூழலை தனது தொடக்கமாக எடுத்துக் கொண்டு, சமயம் வரும் போது 1969-ம் ஆண்டு தொடக்கம் முதல் வெளிப்படத் தொடங்கிய புத்துணர்வுடைய செயல்திறன் பற்றி பேசத் தொடங்கினார்கள்.

21.3.1969 அன்று சாவித்ரி சம்பந்தமான பணிகளுக்குப் பிறகு ஸ்ரீஅன்னை "குழந்தாய் உனக்குத் தெரியுமா? இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து "புத்துணர்வு" பூமியை நோக்கி வந்து கொண்டிருக்கிறது என்றும், அது அனைத்தையும் கூறுவதுடன் - எதைச்செய்ய வேண்டும், எதைச் செய்யக் கூடாது என்றும், மக்களில் யார் உள்ளுணர்வுடன் உள்ளார்கள், எவரொருவர் தங்களை மாற்றிக் கொள்ள விரும்புகிறார்கள், என்றும் நமக்குச் சுட்டிக் காட்டுகிறது.

இந்தப்புத்துணர்வானது படிப்படியாகவும், மென்மையாகவும், ஒவ்வொன்றையும் நடைப்படுத்தி வருகிறது. எப்பொழுது நீ உன்னிடமிருந்து தனிமைப்படுகிறாயோ, மௌனமாகவும் சப்தமின்றியும் உணருகிறாயோ, அப்பொழுது அது நீ என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக்கூடாது என்பதையும் கூறும்.

இந்தப்புத்துணர்வானது எதையும் மூர்க்கத்தனமாகவோ, வலுக்கட்டாயமாகவோ செய்யாது. ஆனால் மென்மையாகவும் படிப்படியாகவும் செய்யும். இது மனத்தளவிலும், சுய நிலையிலும் மட்டுமல்லாமல் உடலளவிலும் செயல்படும். உடலிலும் மற்ற அனைத்திலும் அதிகமான கவனத்தை எடுத்துக்கொள்கிறது. இந்த உணர்வை உன்னைச் சுற்றிலும் இருக்கச் செய்கிறேன். இதைக்

காண்பதுடன், உணரவும் செய்வாய். அது அனைத்தையும் உனக்குக் கூறும். அது எப்பொழுதும் புன்முறுவலிக்கும், கோபப்படாது, திட்டாது, ஆனால் அது மிருதுவானதாகவும்; இனிமையானதாகவும் இருக்கும் இதை நீயே பார்"

ஸ்ரீஅன்னை எப்பொழுதும் தனது வாக்குத் தவறுவதில்லை. நான் மேன்மேலும் இந்தப்புத்துணர்வு பற்றியும், அதன் செயல்பாடு பற்றியும் மிகவும் கவனத்துடன் உணர்ந்து வந்தேன். 1.4.1969 அன்று ஸ்ரீஅன்னையின் ஓர் உரையாடலின் ஒருபகுதியை எனக்குக் கீழ்க்கண்டவாறு விளக்கினார்கள்:-

> இந்த ஆண்டின் தொடக்கத்திலிருந்தே மனிதர்களை ஒரு புதிய சிருஷ்டிக்கு, அதிமனிதனுக்குத் தயார்செய்வதற்காக ஒரு புதிய உணர்வு பூமியில் வேலைசெய்கிறது. இந்தச் சிருஷ்டி சாத்தியமாக வேண்டுமானால் மனிதனுடைய உடல் எந்தப் பொருளால் ஆகியிருக்கிறதோ. அதுவே ஒரு பெரியமாற்றம் அடையவேண்டும், இன்னும் அதிகமாக அந்த உணர்வை ஏற்பதாயும், அதன் வேலைக்கு இன்றும் அதிக இளக்கமானதாகவும் இருக்க வேண்டும்.
> இந்தக் குனங்களைத்தாம் நாம் உடற்கல்வி மூலம் பெறுகிறோம். ஆகவே அதுபோன்ற பயனைக்கருதி நாம் இந்த உடற்கல்வி முறையினைப்பின்பற்றி வந்தோமானால் நிச்சயமாக நாம் மிக நல்ல விளைவைப்பெறலாம்.
> முன்னேற்றத்திற்கும், சாதனைபடைப்பதற்கும், எல்லோருக்கும் எனது ஆசீர்வாதம்
>
> *MCW 12:278*

வளர்வதற்கும், அதை அடைவதற்கும் எனது ஆசிகள்!

நாட்கள் நகர்ந்தன. பணிகள் நிறைவேறி வந்தன. ஒரு நாள் அன்னை என்னிடம் கீழ்க்கண்டவாறு கூறினார்கள்:-

> "நான் இப்பொழுது சரியான ஒரு பணியைப் பற்றிக்கொண்டேன் - அது ஸ்ரீஅரவிந்தோ, நான் என்ன செய்யவேண்டும் என ஆவல் கொண்டிருப்பது தான்".

மற்றுமொரு சந்தர்ப்பத்தில் ஸ்ரீஅன்னை கூறினார்:-

> "சாவித்ரி எனக்குக் கூட மிக நல்லதொரு காவியம். ஏனெனில் அதை நான் படிக்கும் போதும் அல்லது பாராயணம் செய்யும் போதும் எதுவும் நினைப்பதில்லை. நான் அதிலேயே லயித்து விடுகிறேன். எனக்கு இந்த அனுபவம் தேவைப்படுகிறது."

உடனே நான்; ஸ்ரீஅன்னையே இது தங்களுக்கு அவசியமற்ற ஒன்று. ஏனெனில் தாங்களே தெய்வமல்லவா? என பதிலுரைத்தேன். மகிழ்ச்சிப் புன்னகையுடன் ஸ்ரீஅன்னை அளித்தபதில்:-

> *ஆம்! நான்! (தனது உடலை சுட்டிக்காட்டி) இந்த பௌதீக உடலில். மேலும் பௌதீக உலகம் உள்ளதே, அது பூரணத்துவம் பெறப்படவேண்டும். என்னைப் பொருத்தவரை எதுவுமே எனக்குப் போதாது.*

மீண்டும் சாவித்ரியின் அடுத்த வகுப்பில் தெளியப்படுத்திய சாராம்சம்:-

> "உண்மையிலேயே இந்தப்பணி மிகவும் சிறந்தது. நான் ஒருமுனைப்பட்டு இந்த ஸ்ருஷ்டியின் தொடக்கத்திற்குச் சென்று பார்க்கும் பொழுது, அனைத்து வித உண்மைகளையும் பார்த்து அதன் பின்னர் பேச முடிகிறது".
>
> ஓவ்வொரு முறையும் நான் பேசும் பொழுது, ஸ்ரீஅரவிந்தர் இங்கு வருகிறார். அவர் சரியாக நான் என்ன பேச வேண்டும் என விரும்புகிறாரோ அதையே பேசுகிறேன். சாவித்ரியின் உள்ளடங்கியுள்ள உண்மையை நான் வெளிப்படுத்தவே அவர் ஆவலுறுகிறார்.
>
> ஒவ்வொரு முறையும் அவர் வரும்பொழுது அதியற்புதமான சூழல் உருவாக்கப்படுகிறது. ஏற்கனவே நான் சாவித்ரி படித்திருந்தாலும் இந்த மாதிரியான படிப்புக்கு ஈடு இணையாக இருந்ததில்லை".

எங்களது பணி 9.8.1970 வரை தொடர்ந்தது. ஸ்ரீஅன்னை தமது உடல் நலக்காரணத்தால் நிறுத்தி வைக்கப்பட வேண்டியிருந்தது. புத்தகம் ஒன்றில் நான்காவது காண்டத்தில் உள்ள பகுதி பாதியிலேயே நிறுத்தப்பட்டது. அது வருமாறு:-

> *A Consciousness that knows not its own truth,*
> *A vagrant hunter of misleading dawns,*
> *Between the being's dark and luminous ends*
> *Moves here in a half-light that seems the whole:…*
>
> *…*
> *As if a present without future or past*
> *Repeating the same revolution's whirl*
> *Turned on its axis in its own Inane.* — *P.55-56*

இந்தப்பகுதியைப் பற்றி ஸ்ரீஅன்னை கீழ்க்கண்டவாறு விமர்சித்தார்:-

> “இந்த உலகமானது, அறியாமையின், மமதையின் காரணமாக காணப்படும் கண்களுக்கு அறிந்து கொள்ள இயலாமலும், புரிந்து கொள்ள இயலாமலும், உற்பத்தியான இடத்திலிருந்து துண்டிக்கப்பட்ட நிலையிலும் தெரிகிறது. இவை அனைத்தும் மறைக்கப்பட்டுள்ளன. இது கண்டு பிடிக்கப்பட்டு, உள்ளுணர்வுடன் வாழவில்லையெனில், எப்பொழுதும், ஒரு சம்பந்தமற்ற அச்சத்துடன் வாழ வேண்டியிருக்கும். ஆனால் நாம் அதைக் கண்டுபிடிக்கவே உள்ளோம். அறிவதற்கும், வாழ்வதற்கும், ஒளியும், அறிவும் அதன் உண்மைபொருளும் ஒருநாள் வெளிப்படும் என்ற எண்ணத்துடன், அந்த அச்சத்தை நாம் ஒரு திட சித்தத்துடன் தாங்கிக் கொண்டு வாழ்வோம்.
>
> பொறுமையுடனும், திடசித்தத்துடனும், அமைதியுடனும் நாம் தொடர்ந்து, சகித்துக் கொண்டு அதை உணர வேண்டும்.

ஸ்ரீஅன்னை, புத்தகம் ஒன்று காண்டம் ஒன்றிற்கு பிப்ரவரி 1972-ல் தனது விளக்கங்களைத் தொகுத்து அதற்கேற்ற, ஒவ்வொரு பகுதிக்கும் ஏற்றவாறு, அவர்களின் விருப்பப்படி, கட்டளைப்படி, நான் வரைந்த சித்திரங்களுடன் கூடிய ஒரு புத்தகமாக வெளியிட்ட போது அதற்கு ஸ்ரீஅன்னை வைத்த தலைப்பு




“சில சித்திரங்களுடன் - சாவித்ரி பற்றி”

மற்றும் அதற்கான செய்தி:




“சாவித்ரி ஸ்ரீஅரவிந்தரின் தொலைநோக்கின் உச்சக்கட்டமான சத்திய பெரு வெளிப்பாடு”

*ஸ்ரீஅன்னை.*

மேலும் சாவித்ரி பற்றிய காண்டம் 2, 3, நான்காம் காண்டத்தில் பாதிக்கான ஸ்ரீஅன்னையின் விளக்கங்களுடன் கூடிய மற்றும் மூன்று தொகுப்புகள் தயாராகி வெளியிட உள்ளன.

எங்களது பணி தொடர்ந்து கொண்டிருந்த சமயம், ஸ்ரீஅரவிந்தர் அவர்களின் சிறந்த சாதனையின், அபூர்வமான நூண்ணறிவுக்கான விளக்கங்களை, வியாக்யானங்களை ஒளிமயமான தனது சுய அனுபவத்தில் கண்டறிந்தவற்றை ஸ்ரீஅன்னை விளக்கினார்கள்.

இந்த அரிய சந்தர்ப்பமளித்த ஸ்ரீஅரவிந்தர், தெய்வ அன்னை அவர்களின் அருளுக்கும் அன்புக்கும் எனது ஆழ்ந்த நன்றியுணர்வை சமர்ப்பிக்கின்றேன்.

*Huta.*

*தமிழாக்கம்: ஸ்ரீரங்கம் ஆர்.குப்புசாமி.*

# சாவித்ரி

ஒரு சுருக்கமான அறிமுகம்
(நான்கு கட்ட விரிவுரை)

ஆங்கிலம்: மங்கேஷ் நட்கர்னி

தமிழாக்கம்: ஸ்ரீரங்கம் ஆர். குப்புசாமி

ஓர் சத்ய வெளிப்பாட்டின் ரகசியம்

பகுதி - 1

வெளியிடப்பட்ட ரகசியம்

நாம் தெய்வ அன்னையைத் தொழுது "சாவித்ரி" காவியத்தில் நமது கவனத்தைச் செலுத்துவோமாக.

நூற்றாண்டு வெளியீடான "சாவித்ரி" காவியத்தின் புத்தகம் III காண்டம் 2, பக்கம் 3, 4- யை நான் படிக்கத் தொடங்குகிறேன்.

*At the head she stands of birth and toil and fate,*
*In their slow round the cycles turn to her call;*
*Alone her hands can change Time's dragon base.*
*Hers is the mystery the Night conceals;*
*The spirit's alchemist energy is hers;*
*She is the golden bridge, the wonderful fire.*
*The luminous heart of the Unknown is she,*
*A power of silence in the depths of God;*
*She is the Force, the inevitable Word,*
*The magnet of our difficult ascent,*
*The Sun from which we kindle all our suns,*
*The Light that leans from the unrealised Vasts,*
*The joy that beckons from the impossible,*
*The Might of all that never yet came down.*
*All Nature dumbly calls to her alone*
*To heal with her feet the aching throb of life*
*And break the seals on the dim soul of man*
*And kindle her fire in the closed heart of things.*
*All here shall be one day her sweetness' home,*
*All contraries prepare her harmony;*

*Towards her our knowledge climbs, our passion gropes;*
*In her miraculous rapture we shall dwell,*
*Her clasp shall turn to ecstasy our pain.*
*Our self shall be one self with all through her.*

*Page 314*

எந்தத்தரத்திலும் ஒப்பிட்டுப் பார்க்கையில் “சாவித்ரி” ஓர் குறிப்பிடத்தக்க காவியமாகும். இந்த நூற்றாண்டின் காவியங்களிலெல்லாம் மிகவுயர்ந்த காவியம் என்பதும் பொருத்தமாகும். அமெரிக்கரான திரு. ரோமன் ஃபிராங்க் என்ற கல்விமான், ஆங்கில மொழியிலேயே மிகவுயர்ந்த காவியமாக “சாவித்ரி” தான் இருக்க முடியும் எனத் தெளிவுபடுத்துகிறார். மேலும் இது விசாலமானதும், பூரணமானதும்; அழகானதுமானதும்; பிரபஞ்ச சம்பந்தமானதுமான இதற்கு முன் எப்பொழுதுமே இயற்றப்படாத ஒரு காவியம் என துணிச்சலான கருத்தை வெளியிட்டுள்ளார். இப்புவியின் இருளிலும், சச்சரவுகளிலிருந்தும்; உயர்ந்த ஆன்மீக உணர்வுகளிலும், மனிதனின் ஒவ்வொரு முக்கிய செயல்களிலும், ஒளி பெறச் செய்து, மிகப் பெரியதும், அற்புதமானதுமான ஒப்பற்ற திறமையின் வாயிலாக, ஒன்று போல் மற்றொன்றை உருவகப்படுத்தி, தனது புகழை வெளிப்படுத்துகிறது. மனிதனின் அறியும் திறனை விரிவுபடுத்தி எல்லையற்ற பரம்பொருளை நோக்கி செல்வதற்கு இப்புவியில் ஏற்படுத்தப்பட்ட கலைநயத்துடன் கூடிய ஒரு சக்தி வாய்ந்ததே “சாவித்ரி”.

ஸ்ரீ அரவிந்தர் அவர்களின் எழுத்துகளில் “சாவித்ரி” பலவிதங்களில் ஓர் உன்னத இடத்தை வகிக்கிறது. இந்த ஒரு செயலில் தான் அவர் மிகவும் கடினமாகவும்; நீண்டநாட்களாகவும் செயல்பட்டுள்ளார். சாவித்ரியின் முந்தயவடிவமானது ஸ்ரீஅரவிந்தர் அவர்கள் பரோடாவில் இருக்கும்பொழுது எழுதப்பட்டது. இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் இப்புவியில் ஸ்ரீஅரவிந்தர் பௌதீகவுடலில் இருக்கும்வரை, அவர் திரும்பத் திரும்பப் பார்த்தும்; மீண்டும் மீண்டும் மீண்டும் எழுதியும் புரட்டிப் பார்த்தும் தொடர்ந்து செயல்பட்டு வந்துள்ளார். இது பெரும்பாலும் அறியப்பட்ட ஒரு விஷயமாக இருந்த போதும் ஒரு நீர்வீழ்ச்சி போன்று பொங்கிப் பாயும் சிருஷ்டிக்கக்கூடிய திறமையை தமது கட்டுப்பாட்டில் ஸ்ரீஅரவிந்தர் எவ்வாறு வைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

ஸ்ரீஅரவிந்தர் மாதாமாதம் தொடர்ந்து வரிசைப்படுத்தி எழுதிவந்த பலவற்றை அவருடன் இருந்த பலர் எங்களுக்கு ஸ்ரீஅரவிந்தர் எவ்வாறு அமர்ந்து, எவ்வாறு வார்த்தைகள் அவரது விரல்களில் சக்தி வாய்ந்ததும், ஊக்கமளிக்கும் வகையில் நீர்வீழ்ச்சியென மடை திறந்த வெள்ளம் போலும், எவ்வித முயற்சியுமின்றி எழுதிவந்ததைக்கண்ட ஆச்சரியத்தை விவரித்தனர். பல கருத்துகள் அடங்கிய பல கட்டுரைகளையும் புத்தகங்களாக எழுதியுள்ளார்.

தெய்வீகவாழ்க்கை, வேதங்களின் ரகசியம், கீதைப் பேருரைகள், மனோதத்துவ சாஸ்திரமும் சமூக வளர்ச்சியும், இந்திய கலாச்சாரம், மற்றும் ஒருங்கிணைந்த யோகம், எதிர்கால காவியம் போன்றவற்றை ஏழாண்டுகளில் வெளியிட்டார். இப்பேற்பட்ட திறமையும், படைக்கும் திறனும், தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டிருந்த ஸ்ரீஅரவிந்தர் கிட்டதட்ட அரை நூற்றாண்டு காலம் சாவித்ரி எழுதுவதற்கு மட்டும் ஏன் எடுத்துக்கொண்டார்? அப்படியென்ன அதிகமாகவும்; பிரத்யோகமாகவும் என்ன விபரம் சாவித்ரியில் உள்ளது?

“சாவித்ரி” காவியம் பல நிலைகளில் வடிவமைக்கப்பட்டது என்பதிலிருந்தே இது ஒரு விறுவிறுப்பான காவியம் என்பது தெரிகிறது. இங்கு நாம் சில எடுப்பான உண்மைகளைத் தெரிந்துகொள்வது அவசியம். அநேகமாக ஸ்ரீஅரவிந்தர் சாவித்ரியின் முதல் மொழிபெயர்ப்பை இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுதியிருக்கலாம். இது எழுதிய அதே நேரத்தில் அவர் ஊர்வசி மற்றும் அன்பும் மரணமும் என்ற வேறு இரண்டு செய்யுள்களையும் எழுதினார். ஆனால் மஹாபாரதத்தில், வனபர்வதத்தில் வரும் சாவித்ரி வரலாறு ஸ்ரீஅரவிந்தரை மிகவும் கவர்ந்தது. இந்த மூன்று கதைகளுமான ஊர்வசி, அன்பும் மரணமும் மற்றும் சாவித்ரி ஒரே கருவானாலும் சில வேறுபாடுகளைக் கொண்டிருக்கின்றன. இந்த மூன்று கதைகளின் அடிப்படையான மூலப்பொருள் அன்பு; மரணம் மற்றும் இப்புவிவாழ்க்கை என்பதாகும். ஊர்வசியில் “புரூரவா” தன்னைவிட்டுப் பிரிந்து, சொர்க்கத்தின் இருப்பிடம் சென்ற ஊர்வசியைத் தொடர்கிறார். ஊர்வசியுடன் இணைந்திருக்க அவர் தனது பூவுலக வாழ்க்கையையும், தனது ராஜ்யம் மற்றும் குடிமக்களையும் அதற்குக் காணிக்கையாக கொடுக்க வேண்டியிருந்தது. அன்பு மற்றும் மரணம் என்ற காவியத்தில் “பிரியம்வதா” பாம்பினால் கடியுண்டு மரணமடைந்த சமயம் அவளது காதலன் ருரு அவளைத்தொடர்ந்து மீண்டும் அவரது அன்புக் காதலியுடன் புவியுலகம் வர வேண்டியதற்கு தனது வாழ் நாளில் அரைப்பகுதியை காணிக்கையாக கொடுக்க நேர்ந்தது. இந்த இரண்டு கதைகளிலும் அன்பு, மரணத்தை வென்று மாபெரும் வெற்றிபெற்றாலும். புவியுலகவாழ்க்கையை காணிக்கையாக்க வேண்டியிருந்தது புலப்படுகிறது.

“சாவித்ரி” காவியத்தில் சத்யவான் மரணமடைந்த பின், சாவித்ரி மரண உலகத்திலும் துரத்திச் செல்கிறாள். வீராவேசமாக இருண்ட உலகிலும்; மரணத்துடன் மல்லுக்கட்டி இறுதியில் அன்பினால் மாபெரும் வெற்றியுடன் மீண்டும் புவியில் சத்யவானுடன் வாழ்வதற்குப் பூவுலகம் திரும்புகிறாள். இதற்காக அவன் தனது பூவுலக வாழ்க்கையைத் தியாகம் செய்யவில்லை. இந்த ஒரு வீரச் செயல் தான் ஸ்ரீஅரவிந்தரின் ஈர்ப்புக்கு முக்கிய காரணம்.

ஸ்ரீஅரவிந்தர் அவர்கள் மஹாபாரதத்தில் தான் கண்ட பிரதானமான கதையைக் கூறியுள்ளார்:-

*"மஹாபாரதத்தில் சத்யவான் சாவித்ரி கதையானது சதிபதிகளுக்குரிய, மரணத்தை வெல்லும், ஓர் அன்பின் முக்கியத்துவக் கதையாக வர்ணிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்தக் காவியமானது மனித சமுதாயத்தின் கதைகளின் பகுதிகளான, புராணக் கதைகளின், வேத சுழற்சிகளின் விசேஷத்தைக் கொண்டுள்ளது. சத்யவான் தனது அந்தரங்க ஆத்மாவில் தெய்வீக உண்மையைச் சுமந்து கொண்டு செல்கையில் மரணம் மற்றும் அறியாமையின் பிடியில் சிக்குகிறான். "சாவித்ரி" தெய்வீகமான பெயரையுடைய சூரியனின் மகள். பிரதானமான உண்மையின் தெய்வத்தாய். புவியில் அவதரித்து குதிரைகளுக்கெல்லாம் அதிபதியானவரும், பௌதீகவுலகில் தனது தந்தையும்; தவங்களுக்கெல்லாம் அதிபதியுமான அஸ்வபதியைக் காப்பாற்றவும், ஒருமுனைப்பட்ட ஆன்மீக முயற்சியின் உதவியால் அழிவுத்தன்மையிலிருந்து அழியாத்தன்மைக்கு நம்மை உயர்த்துவதற்கும் உதவ வந்தவள். உபசரணையில் உயர்ந்த கடவுளும் சத்யவானின் தகப்பனாரும் தெய்வ உணர்வுடன் கூடியவருமான த்யூமசேனர், பார்வையற்றவராகவும், புகழ்மிக்க சொர்க்கத்துக்கிணையான சாம்ராஜ்யத்தை இழந்தவருமாக உள்ளவர். இது உருவகப்படுத்தப்பட்ட கதையே இல்லை. இந்த கதாபாத்திரங்கள் உருவம் கொடுக்கப்பட்டவையல்ல. ஆனால் எந்த உருவங்களுடன் நாம் உறுதியான உணர்வுடன் கலந்து, அவர்களினால் அழியும் தன்மையிலிருந்து அழியாவுலகை அடையத் தேவையான உள்ளுணர்வுடன் செயல்பட இயலுமோ அதற்காகத் தோன்றிய அவதாரங்கள், அல்லது அவதரித்தவர்கள்".*

ஸ்ரீஅரவிந்தர் மஹாபாரதக் கதையை எடுத்து, அதன் வாயிலாக ஒரு புதிய உலகைச் சுவாசித்தார். அதன் பலனாக சாவித்ரி ஒரு பிரதானமான வெளிப்பாடாக ஸ்ரீஅரவிந்தரின் செய்தியாகவும், தொலைநோக்குப் பார்வையாகவும் ஆனது. ஒருமுறை அவர் அன்னைக்கு எழுதிய கடிதத்தில்...

*"நாமிருப்பது சொர்க்க பூமியல்ல. வேதத்தில் கூறியுள்ளபடி பூரணயோகமே அதன் முழுமையானதான சொர்க்கமும் புவியுமாகும். இரண்டும் சமமானதும் ஒன்றானதுமாகும்."*

மனித சமுதாயம் இந்தவுலகத்து எதிர்காலத்தை அறிந்து, இந்த பூவுலகில் வாழ்க்கையின் முழுமையை உணர இயலும் எனக்கண்ட, இந்த உலகம் இதுவரை அறிந்திராத, கண்டிராத ஒரு, தத்துவஞானி ஸ்ரீஅரவிந்தர் ஒருவரேயாக

இருக்கலாம். மற்ற ஆன்மீகத் தத்துவஞானிகள் அனைவரும் மனித சமுதாயம் இப்புவியில் ஓர் பூரணத்துவம் அடைய இயலாது எனவும்; அது இறந்த பின்புதான் கைகூடும் எனவும் எந்தவித மாறுபட்ட கருத்துமின்றி எண்ணினர். ஆனால் ஸ்ரீஅரவிந்தரின் யோகம் இதை இந்தப்பூவுலகில் செய்ய இயலும் என அற்புதமாகக் கண்டு அந்த அற்புத நிகழ்வை, தெய்வ வாழ்க்கையாக இந்தப்புவியில் செய்தும் காட்டியுள்ளார். 1971-ம் ஆண்டு அன்னை தனது செய்தியில் கீழ்க்கண்டவாறு கூறியுள்ளார்.

> "ஸ்ரீஅரவிந்தர் உலகத்தின் அழகையும், அதன் எதிர்காலத்தையும் எடுத்துக் கூறி, நாம் உணரச் செய்யவே புவிக்கு வந்தார். அவர் நம்பிக்கையளிக்க மட்டும் வராமல், எந்த ஒளியை நோக்கி, உலகம் நகர்ந்து கொண்டிருக்கிறது என்ற நிச்சயமான செய்தியைக் கொடுக்க வந்தார். இந்த உலகம் மோசமான எதிர்பாராத நிகழ்வல்ல. இது ஆச்சரியத் தக்க வெளிப்பாட்டை நோக்கி நகர்ந்து கொண்டுள்ளது. இந்த உலகம் எதிர்காலத்தின் அழகுமிகுந்த நிச்சயத் தன்மையையடைவே விரும்புகிறது. ஸ்ரீஅரவிந்தர் அதற்கான உறுதியை அளித்துள்ளார்".

சாவித்ரியில் மீண்டும் மீண்டும் அந்த உறுதியை அவர் உறுதி செய்துள்ளார். ஸ்ரீஅரவிந்தரின் ஊக்கம் ஒருமனிதனை தன்னையும் மீறி எதிர்கால அழகை ரசிக்கத்தக்க அளவு இதில் உள்ளது. சாவித்ரியில் கீழ்க்கண்டவரிகளை உற்றுநோக்குங்கள்.

> *"O Force-compelled, Fate-driven earth-born race,*
> *O petty adventurers in an infinite world*
> *And prisoners of a dwarf humanity,*
> *How long will you tread the circling tracks of mind*
> *Around your little self and petty things?*
> *But not for a changeless littleness were you meant,*
> *Not for vain repetition were you built;*
> *Out of the Immortal's substance you were made;*
> *Your actions can be swift revealing steps,*
> *Your life a changeful mould for growing gods.*
> *A Seer, a strong Creator, is within,*
> *The immaculate Grandeur broods upon your days,*
> *Almighty powers are shut in Nature's cells.*
> *A greater destiny waits you in your front:*
> *This transient earthly being if he wills*

*Can fit his acts to a transcendent scheme.*
*He who now stares at the world with ignorant eyes*
*Hardly from the Inconscient's night aroused,*
*That look at images and not at Truth,*
*Can fill those orbs with an immortal's sight.*
*Yet shall the godhead grow within your hearts,*
*You shall awake into the spirit's air*
*And feel the breaking walls of mortal mind*
*And hear the message which left life's heart dumb*
*And look through Nature with sun-gazing lids*
*And blow your conch-shells at the Eternal's gate.*
*Authors of earth's high change, to you it is given*
*To cross the dangerous spaces of the soul*
*And touch the mighty Mother stark awake*
*And meet the Omnipotent in this house of flesh*
*And make of life the million-bodied One.*

*Book IV Canto 3 page 370.*

இப்பொழுது சாவித்ரி இந்த அளவு ஸ்ரீஅரவிந்தரை ஏன் வசீகரித்தது என்பது புலனாகும். உயர்ந்த வீராங்கனையான சாவித்ரி காவியத்தில் ஒரு விதை இந்த உலகத்தின் வாழ்க்கையை ஊர்ஜிதம் செய்ததைக் கண்டார். ஆகவே தான் ஸ்ரீஅரவிந்தர் தனது யோக சாதனையால் எவ்வாறு முன்னேற்றம் கண்டாரோ அதுபோல் மீண்டும் மீண்டும் சாவித்ரி கதைக்கு வருகிறார். ஒவ்வொரு சித்தியிலும் பெரிய சிகரத்தை அடைந்து அதன் தன்னுணர்வைக் கண்டார். பின் சாவித்ரி செய்யுளை புதிய உணர்வுடன் கூடிய நிலையில் எழுத முயன்றார். இதை அவரே தமது கடிதத்தின் வாயிலாக விளக்குகிறார்.

*"நான் சாவித்ரியை ஒரு உச்சகட்ட நிலைக்கு உபயோகித்தேன். மனஅளவில் அதை நான் தொடங்கினேன். ஒவ்வொரு முறையும் நான் மேல் நிலையை அடையும் போது, அந்த நிலையில் மறுமுறையும் எழுதினேன். உண்மையிலேயே நான் சாவித்ரியை ஒரு செய்யுள் என்ற உணர்வில் எழுதி முடிக்க விரும்பவில்லை. ஆனால் ஓர் ஆராய்ச்சிக்கான, அதாவது ஒரு செய்யுளை ஒருவரின் யோக நிலையிலிருந்து எப்படி எழுதி அதை ஒரு சிறந்த சிருஷ்டியாக ஆக்க இயலும் என்ற மனதுடன் செயல்பட்டேன்."*

இந்த வார்த்தைகள் சாவித்ரியின் உயர்ந்த மதிப்பை நமக்கு வெளிப்படுத்துகிறது. உண்மையிலேயே இது ஸ்ரீஅரவிந்தரின் உடலில் ஏற்பட்ட

ஒலி அதிர்வுகளுடன் கூடிய தன்னுணர்வு எனக் கூறலாம், நாம் உடனடியாக நம்மை உணர்வு பூர்வமான வாழ்க்கைக்கு உயர்த்திக் கொள்வதற்கு ஸ்ரீஅரவிந்தரின் சாவித்ரியைச் சரணடைவதே சாலச் சிறந்தது.

ஸ்ரீஅரவிந்தர் 5000 பக்கங்கள் ஆர்யா பத்திரிகையில் தெய்வீக வாழ்க்கை, ஒருங்கிணைந்த யோக சாதனை, மனோதத்துவ சாஸ்திரமும் சமூக வளர்ச்சியும், போன்ற பல விபரங்கள் எழுதிய பின், ஏன் சாவித்ரியை எழுத முற்பட்டார் என புருவங்களை உயர்த்துகின்றனர். இந்த கட்டுரைகளில் அதிசயக்கத்தக்க வகையில் செயல் விளக்கங்களும், படிப்பதற்கேற்பவும்; தெய்வீக வாழ்க்கை தனி மனிதனுக்கும், கூட்டாக செயல்படவும் ஏற்ப தெளிவுபடுத்தியுள்ளார். பிறகு ஏன் மீண்டும் சாவித்ரியை எழுத முற்பட்டார்?

பண்டிதர்களில் பலர் பலப்பல விடைகளை இந்த வினாவிற்குக் கூறியுள்ளனர். எனது சிற்றறிவுக்கு எட்டிய வரை நான் எனதளவில் கீழ்க்கண்டவாறு



*மார்ச் 5 2003ல் மங்கேஷ் நட்கர்னி உரையாற்றுகிறார்*

பதிலளித்துக் கொண்டேன். கடவுளின் முற்பட்ட அவதாரங்களில் அருள்மிகுந்த கடவுள் அர்ஜுனனுக்கு ஏற்றவாறு பகவத் கீதையை கொடுத்தார். மேலும் அவரது வசிகரப்படுத்தக் கூடிய புல்லாங்குழலின் மூலம் இன்பமூட்டும் ஓசையின் ஈர்ப்பு சக்தியினால் அனைத்து கோபியர்களையும் மயக்க முறச்செய்து அவர்களது தன்னுணர்வுகளை இறைவனின் உணர்வுகளுடன் ஒன்றச் செய்தார். இதற்காக கோபிகள் தங்களுக்காக எந்தவித முயற்சிகளும் செய்யாமல் அந்த மதிமயக்கச் செய்யும் புல்லாங்குழல் ஓசைக்கு வசப்பட்டனர். அவரது புதிய அவதாரத்தில் பரம்பொருளான கடவுள் ஆர்யா பத்திரிகையில் புதிய பகவத்கீதையை வெளியிட்டுள்ளார். அதாவது புதியதாக வரவிருக்கும் அதிமன சக்தி உலகத்திற்கான ஒரு புதிய யோகம். அவரது பரந்து விரிந்த கருணையிலும், அன்பிலும், கோபிகளை விட அதிகமான தன்மையுடன், அதாவது பரவசமூட்டும் தன்னுணர்வுடன் கூடிய சாவித்ரியின் கானத்தில் ஈடுபாடு நமக்குத் தேவை என ஆவலுற்றார். பழங்காலத்திலிருந்த கோபிகளைப்போல் நாமும் மதிமயங்கி மந்திர சக்தியும்; இதமானதும்; இயற்கையான சூழலும் கொண்ட சாவித்ரிக்கு நம்மை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். நிச்சயமாக மேலும் உயர்ந்த நோக்கமுள்ள தன்னுணர்வை நாம் அடைய முடியும். சாவித்ரி ஸ்ரீஅரவிந்தரின் அருள் நிறைந்த ஒரு காவியமாகும். அது புதிய யோகத்திற்கான மந்திரம் என ஸ்ரீஅரவிந்தராலும்; ஸ்ரீஅன்னையாலும் இந்த புவிக்குக் கொண்டுவரப்பட்டுள்ள ஒன்றாகும்.

சிறந்த பண்டிதரும்; யோகியுமான ஸ்ரீகிருஷ்ணப்ரேம், ஆழ்ந்த பொருள் கொண்ட சாவித்ரி பற்றி கீழ்க்கண்டவாறு உணர்த்துகிறார்.

> *“ஸ்ரீஅரவிந்தோ மனிதமனத்தில் பலப்பல நூற்றாண்டுகளாக திறந்து விரிந்து கிடந்த விரிசலை மூடியுள்ளார். பழங்காலங்களில் செய்யுள் - மற்றவையெல்லாம் ஒரு வெளிப்பாடு எனக் கருதிய காலம். அதன் பொருள் அனைத்தும் ஆதியந்த மற்ற உண்மை நிலையை வாழ்க்கையில் உணர்த்துவதாகும். கவிஞர், வருவதை உணரும் ஞானி, தீர்க்கதரிசி மற்றும் மாந்திரீகன், இவர்களின் சொற்பொழிவு ஒரு மந்திர ஒலியாகவும், இன்பமூட்டுவதாகவும் இருக்கும். இதனால் படிப்படியாக ஒருவன் தனது உரிமையை ஏற்கும் சக்தி கிடைத்து, ஒருவன் இருவனாக மாறுதலை மனத்திலிருந்தும், அறிவிலிருந்தும் துண்டிக்கப்பட்ட நிலையை…*
>
> *சாவித்ரியில் இந்தத் துண்டிக்கப்பட்ட நிலை மூடப்பட்டது. இது தானாக எழுந்ததோ அல்லது வேதாந்த எண்ணங்களுடன் எழுந்ததோ அல்ல. ஆனால் தொலை நோக்குப்பார்வை, மற்றும் பொருட் செறிந்ததுமான பிரபஞ்சத்தின் ஸ்தலயாத்திரையின் ஆதிக்கத்துக்குட்பட்டு BHU, BHUWAR, SWAR ஆன உலகின்*

> *படிக்கட்டுகள் நமது உற்று நோக்குதலை வெளிப்படுத்துகிறது. ஒளிக்கு மேலுள்ள உலகங்கள்; இருட்டடிக்கப்பட்ட கீழ் உலகங்கள், மற்றும் நாம் காணும் சுழன்று கொண்டிருக்கும் உலக வாழ்க்கை - இவைகள் அனைத்துக்கும் இது ஒரு நல்ல சகுனம். இது வரை நம்மிடையேயிருந்து வந்த இருளும் நம்பிக்கையின்மையும் நீங்கி நிச்சயம் விசேஷமானதும் நம்பிக்கை தருவதுமாக இந்தச் சாவித்ரி தோன்றியிருக்கிறது. இந்த விடியலுக்கு நாம் தலை வணங்குவோமாக".*

ஸ்ரீஅன்னையைத் தவிர வேறு எவராலும் ஸ்ரீசாவித்ரியின் பேரில் எந்த ஒரு கருத்தும் கூற இயலாது. ஸ்ரீஅன்னை கூறுகிறார்.

> *"சாவித்ரி ஒரு சத்ய நித்யப் போராளியின் வெளிப்பாடு. இது ஒரு தியானமும் ஆகும். இது பரம்பொருளைத் தேடுவதற்கு உதவுவது. ஆதியந்தமற்றது. சாவித்ரியைப் படிப்பது ஒரு யோகம் செய்ய உதவுவதாகும். ஆன்மீக ஒருமைப்பாட்டுக்கு வழி. தெய்வத்தை உணர விரும்பும் ஒவ்வொருவரும் இதை உணரலாம். யோகத்திற்கான ஒவ்வொருபடியும் இதிலுள்ளது. மற்ற யோகங்களின் ரகசியமும் இதில் உள்ளது. தூய உணர்வுடன் ஒருவர் இதில் விளக்கப்பட்டிருப்பதைக் கடைபிடிப்பாரேயாகில், நிச்சயம் அவர் அதிமன யோகத்திற்கான திருவுருவமாற்றமடைய இயலும். இது ஒரு தீர்மானமான வழிகாட்டி. இது ஒருபொழுதும் தவறாது. நிச்சயமாக எவரொருவர் இதன் வழிநடக்க விழைகிறாரோ அவருக்கு உதவும். சாவித்ரி ஒரு மந்திர ஒலியாகும். நான் இதை திரும்பக் கூறுகிறேன். இதன் ஒவ்வொரு வார்த்தையும், கணீரென ஒலிக்கும் வண்ணம், தெளிவாக விளங்கிக்கொள்ளும் வகையிலும், மூலப்பொருளான "ஓம்" எனும் ஒலியை உணரும் வகையிலும் ஒரு சேர அமைக்கப்பட்டுள்ளது".*

ஸ்ரீஅன்னை மேலும் கூறுகிறார்கள்:-

> "சாவித்ரி ஸ்ரீஅரவிந்தரின் யோக சாதனையின் திருவுருவமாற்றமே இந்த யோகம் முதல் முறையாக புவியில் இறங்கியுள்ளது. இது மிகப்பெரிய அளவிலான ஆன்மீக மதிப்பைப் பெற்றுள்ளது. ஈடு இணையற்றது. எவ்வளவு தூரம் இதனுடன் தொடர்பு கொள்கிறோமோ அந்த அளவு உயர்த்தப்படுவோம். ஆ! உண்மையிலேயே இது உயர்ந்தது. எந்த அளவு மனிதர்களின் நலனுக்கு உயர்த்த இயலுமோ அந்த அளவு இந்த அழகிய

> ஒரு சாவித்ரியை ஸ்ரீஅரவிந்தர் விட்டுச் சென்றுள்ளார். சாவித்ரி மட்டுமே நீ உயர ஏறுவதற்கு உதவும் ஏணியின் அச்சாணியாகும். உண்மையாகவே அதில் தியானம் செய்தால் எந்தவிதமான உதவியும் அதன் மூலம் காண முடியும். எவரொருவர் இதன் வழியில் நடக்க விரும்புகிறாரோ அவருக்கு இது ஒரு ஸ்தூலமான உதவியாக இருக்கும். கடவுளே கையைப் பிடித்து உனது தீர்க்கமான குறிக்கோளை அடைய அழைத்துச் செல்வதைப் போல நீ உணர்வாய். தனிப்பட்டவருக்கான எந்தவிதமான கேள்வியாயிருப்பினும் அதன் விடை இதில் உள்ளது. ஒவ்வொரு கஷ்டத்திற்கும், ஒரு தீர்மானமான முறையில் வெற்றிபெற வழிவகுக்கும். உண்மையாகவே யோகம் புரிய தேவையான அனைத்து விபரங்களும் இதிலுள்ளன".

> "ஸ்ரீஅரவிந்தர் இந்த காவியத்தில் அகில உலகத்தையும் புகுத்தியுள்ளார். இது ஓர் அற்புதமானதும் அழகானதுமாகும். ஈடு இணையற்றதுமான பூரணத்துவம் பெற்ற காவியமாகும்".

ஸ்ரீஅன்னை நாம் சாவித்ரியை எவ்வாறு படிக்க வேண்டும் என வழி நடத்துகிறார். உண்மையிலேயே இது கடினமான புத்தகம் என ஏற்றுக் கொள்ளக் கூடியதே. இருப்பினும், ஸ்ரீஅன்னை நாம் இதை நமது சாதனையின் ஓர் அங்கமாகப் படிக்க வேண்டும் என உற்சாகப்படுத்துகிறார்.

> *"நீ புரிந்து கொள்ளவில்லையே என வருந்தாதே. ஆனால் எப்பொழுதும் படித்துக்கொண்டிரு. ஒவ்வொரு முறை நீ படிக்கும் போதும் அதில் ஒவ்வொரு புது விஷயம் புலப்படுவதை உணர்வாய். ஒவ்வொரு முறையும் ஓர் புது உணர்வைக் காண்பாய். ஆனால் இதைத் மற்ற புத்தகங்கள் படிப்பது போலவோ அல்லது செய்தித்தாள்கள் படிப்பது போலவோ படிக்கலாகாது. நீ இதைத் திறந்ததும், சலன மற்ற மனத்துடனும், வேறு எந்தவிதமான எண்ணமுமற்ற நிலையில் படிக்க வேண்டும். சிந்தனையற்ற அமைதியுடனும், திறந்த தெளிந்த மனதுடனும் ஒரு நிலைப்பட்டு ஆழ்ந்திருக்க வேண்டும். பிறகு அதன் லயம், ஒலி அதிர்வலைகள் நேரடியாக உன்னுள் துளைத்து முத்திரை பதிப்பதை உணர்வாய். தானாகவே உன்னுடைய செயற்பாடு, முனைப்பு ஏதுமின்றி விளங்கும்".*

எவரொருவர் உண்மையாகவே யோகம் பயில விழைகிறாரோ நேர்மையுடன் உணருகிறாரோ, அவர், சாவித்ரியின் உதவியுடன் அச்சாணி போன்ற நிலையில் உயர்ந்து சென்று குருவின் உதவியின்றி யோக சாதனை செய்ய இயலும்

என்பதை இது உணர்த்துவதை உணர முடியும்.

உண்மையிலேயே சாவித்ரி ஒரு மிகவுயர்ந்த புலமை பெற்றது. தத்துவங்களுக்கு அப்பாற்பட்டதும்; அனைத்து மதங்களுக்கும் அப்பாற்பட்டதுமானது. இது ஓர் ஆன்மீக வழி காட்டி. யோகம், தவம், மற்றும் சாதனைகள் போன்ற அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுள்ளது. சாவித்ரி அசாதாரணமான சக்தி கொண்டது. எவரொருவர் இந்த அசாதாரண சக்தியைப் பெற விழைகிறாரோ அவருக்குத் தனது அதிர்வலைகளை அளிக்கிறது. ஒவ்வொரு நிலையிலும், உண்மையான தன்னுணர்வுக்கான அதிர்வலைகள் அதில் கிடைக்கும். ஒப்பிட இயலாத ஓர் உன்னத காவியம். உண்மையின் பூரணத்துவம் பெற்றது.

ஸ்ரீஅரவிந்தர் புவிக்குக் கொண்டு வந்த சத்யம் இது.

(முதற்பகுதி முற்றிற்று)

அடுத்த இதழில் இரண்டாம் பகுதி தொடரும்.

# சாவித்ரி ஒளி

*"அழிவற்ற தொன்றின் தேடலே சாவித்ரி*
*அதுவே ஒரு தியானம்".*

ஸ்ரீஅன்னை

ஸ்ரீ அரவிந்தர் அவர்களால் வெளிப்படுத்தப்பட்ட புராண வரலாற்றுக்கவிதை.

இதுபற்றி ஸ்ரீஅன்னை, "ஸ்ரீஅரவிந்தர் அவர்களின் அமானுஷ்யப் பார்வையில் மிகவுயர்ந்ததாக வெளிப்படுத்தப்பட்ட ஒரு காவியம்" என்று கூறியுள்ளார்.

இந்த உன்னதமான படைப்பை நாம் உணர்ந்து, படித்து, உண்மையுடன் வளர இக்கலியுகத்தில் ஒரு சந்தர்ப்பம் நமக்குக் கிடைத்துள்ளது.

இந்தக் காவியத்தைப் படிப்பதாலும், படிக்கக்கூறி கேட்பதாலும், அதைத் தினசரி எழுதுவதாலும் ஏற்படும் பலன்கள் எண்ணிலடங்கா. இதை ஸ்ரீஅன்னை ஒரு சாதகருடன் நடத்திய உரையாடலின் வாயிலாக நாம் அறியலாம். அவற்றில் சில செய்திகளை முதலில் இங்குக் காண்போம்.

*உற்சாகமற்றிருக்கும் போதும், துக்கப்படும் போதும், காரியம் நினைத்தபடி நடக்காத போதும், பொறுமை இழந்து வெறுப்படைந்த போதும் ஓரிருகணம் ஒருநிலைப்பட்டு சாவித்ரியில் ஏதேனும் ஒரு பக்கத்தை எடுத்துப்படி. உனது துக்கமனைத்தும் புகைபோல் மறைவதை உணர்வாய். ஒருபொழுதும் உன்னைச் சித்ரவதை செய்ததை எண்ணவேண்டியிராது. அனைத்துத் துக்கங்களும் மறையும். ஊற்றென உனது மகிழ்ச்சியை உணர்வாய். சிலவரிகளைப் படித்தாலே உனது உள்ளுணர்வுடன் நிரந்தரமான தொடர்பு ஏற்படும். அல்லது சாவித்ரியில் சிலவரிகளைப் படித்தபின் ஆழ்ந்த ஒருநிலைப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டால், உன்னைச் சித்ரவதை செய்வதாக உணரும் நிலைக்கு ஒரு வழி(தீர்வு) கிடைக்கும். சாவித்ரியில் ஏதாவது ஒரு பக்கத்தை, எந்தவிதமான எண்ணமும் அற்ற, நிச்சலமான செயல்பாட்டுடன் திறந்தாயானால் உனது பிரச்சனைகளுக்கு பதில் கிடைப்பது உறுதி. இதைச் சாதாரணமாகவும், பூரண நம்பிக்கையுடனும் செய்தால் வெற்றி நிச்சயம்.*

ஸ்ரீஅன்னை

## ஓர் அனுபவ வரலாறு

*திரு. தயாபாய் புரொஹித் அவர்கள் "அவேக்கனிங்" ஆங்கில மாத இதழில் வெளியிட்ட கருத்தின் தமிழாக்கம். ஆர். குப்புசாமி*

எனக்கு ஆங்கிலம் நன்றாகத் தெரியாததால் சாவித்ரியைப் புரிந்து கொள்ள இயலாத நிலை எனக்குப் பெரிய தாழ்வுமனப்பான்மையை ஏற்படுத்தியிருந்தது. நான் என் மனக்கிலேசத்தை அன்புக்குரிய அன்னைக்குச் சமர்ப்பணம் செய்தேன்.

பொன்னான நாளொன்று எனக்கு உதயமானது. அந்தநாள் 15-8-1999. வாபி மையத்தில் ஸ்ரீஅரவிந்தர் அவர்களின் நினைவுச் சின்னம் வைக்கப்பட்டிருக்கும் சமாதியருகில் நின்று கொண்டிருக்கும்பொழுது, "சாவித்ரியை எழுதத் தொடங்கு" என்று ஒரு குரல் கேட்டதாக உணர்ந்த நாள். அதை நான் அவ்வளவு முக்கியமாக எடுத்துக்கொள்ளவில்லை. ஆனால் அது மீண்டும் அடுத்தநாளும் ஏற்பட்டது. இதை நான் என் துணைவி பாரதியிடம் கூறியபோது, அவர் நீங்கள் ஓர் இதய நோயாளி, சாவித்ரியை எழுதுவது என்பது மிகவும் சிரமமான ஒன்று என்று கூறினார். நான் என் துணைவியிடம் "இது ஸ்ரீ அன்னையின் யோசனை" இதன்பின் ஓர் அர்த்தம் இருக்கும்." என்று கூறினேன்.

20-8-1999 அன்று சாவித்ரியை எழுதத் தொடங்கினேன். எனக்கு அதிக நேரம் எழுதி பழக்கம் இல்லாதகாரணத்தால் விரல்கள் வலி எடுக்கத் தொடங்கின. என் துணைவி என் விரலுக்குத் தையற்காரர் உபயோகிக்கும் ஓர் உபகரணத்தை அணிந்து கொள்ளக் கொடுத்துதவினார். அது மழைக்காலமாக இருந்த போதும், எழுதும் போது எனக்கு வியர்த்தது. சிறிது இடைவெளி கொடுத்து ஓய்வெடுத்துக் கொண்டேன். என் விரல்கள் துடிப்புடன் அதிர்வுகளை உண்டாக்கக்கண்டேன். இது என் அன்றாட அனுபவமானது.

ஒரு சமயம் என் நண்பர் ஒருவர் என்னுடன் கை குலுக்கும் போது மின்சாரம் பாய்வதுபோல் அதிர்ச்சியடைந்தார். நான் சாவித்ரியை எழுதுவதை அவரிடம் கூறினேன். அவர் ஆச்சரியமடைந்தார். ஒரு நாள் ஒரு பக்தர் வாபி மையத்திலுள்ள தியான அறைக்குச் சென்றார். அங்கு வரவேற்பறையிலிருந்து அதிர்வுகள் வருவதைக் கண்டார். உடனே கையெழுத்துப் பிரதியான சாவித்ரியை நமஸ்கரித்து அதிலிருந்து வரும் சக்திவாய்ந்த அதிர்வுகளை உணர்ந்தார்.

20-4-2000 - த்தன்று சாவித்ரி எழுதுவதை நிறைவு செய்து வாபி மைய சமாதியில் 24-4-2000-ல் சமர்ப்பித்தேன். அன்று தரிசன நாள். என் 40 ஆண்டு

ஆவல், மற்றும் பக்தியுணர்வு யாவும் 15-8-2000-ல் இந்த நான்கு பகுதிகளையும் பாண்டிச்சேரிக்குக் கொண்டுவந்து ஸ்ரீஅரவிந்தோ ஸ்ரீஅன்னைக்குச் சமர்ப்பித்தபின் பூர்த்தியடையக் கண்டேன்.

> *“O Savitri, Thou art my spirit’s Power,*
> *The revealing voice of my immortal word.*
> *The face of Truth upon the roads of Time*
> *Pointing to the souls of men the routes to God”* p.703

மேலும் பல விபரங்கள் “அவேக்கனிங்” அக்டோபர் 2002-ல் வெளியானவற்றின் தமிழாக்கம்.

**குழந்தைகளுக்கும், சிறுவர்களுக்கும், வயோதியர்களுக்கும்**

தனது 12 வயது நிரம்பிய தனது மகனுக்கு, அவன் உறங்கச் செல்லும்போது சாவித்ரியிலிருந்து சிலவரிகளை படிப்பதாகவும், அது அபரிமிதமான பலன்களைக் கொடுத்துள்ளதாகவும் கூறியதோடு, அவரது மூத்த மகனும் தனது ஒரு வயது நிரம்பிய மகளுக்கு உறங்கச் செல்லுமுன் சாவித்ரியிலிருந்து சில வரிகளைப்படிப்பதாகவும், அதை குழந்தை உற்று கவனித்து மகிழ்வுற்றதாகவும் கூறினார்.

மற்றொரு நண்பர் தனது பையனுக்கு தினமும் காலையும், மாலையும் சாவித்ரியை படித்துக் காட்டுவதாகவும், அதனால் அவரது பையனின் நடத்தையில் பெருத்த மாற்றம் ஏற்பட்டிருப்பதாகவும் கூறினார். மேலும் அவரது பையன் மிகவும் குறும்புத்தனமுடையவன் என்றும், அவனைக்கட்டுப்படுத்த இயலவில்லை எனவும் கூறி, அவன் தினமும் சாவித்ரியை தனக்குப் படித்துக்காட்டும்படி கூறுவதுடன் உறங்கும்பொழுது என்னை தொந்திரவு செய்யாதீர்கள் நான் ஸ்ரீ அன்னையுடன் உறங்கிக் கொண்டிருக்கிறேன் எனக் கூறுவதையும் விவரிக்கிறார்.

ஒரு பள்ளி ஆசிரியை சாவித்ரி காவியத்தின் மீது மிகவும் அன்பு கொண்டவர். 9 வயது முதல் 12 வயது சிறுவர்களிடம் தான் முறைப்படி சாவித்ரியைப் படிக்கும் பொழுது அவர்கள் சிலவரிகளைப் பாராட்டுவதும் அவ்வரிகளைத் தங்களுக்காக எழுதித்தர வேண்டும் என்றும், அதைத் தாங்கள் மனப்பாடம் செய்து கொள்ள ஆவலாக இருக்கிறோம் என்றும் கூறுவதைக் கேட்கத் தனக்கு மிகவும் வியப்பாக உள்ளதாகத் தெரிவித்திருக்கிறார்.

மேலும் சாவித்ரியை புரிந்து கொள்ளும் வயதில் இல்லாத குழந்தைகளானாலும், அவர்களது ஆன்மாக்கள் அதனால் தொடர்பு கொண்டுள்ளன என்பதை அறியும்

போது மிகவும் சந்தோஷப்படுவதை பெருமையாக உணர்வதாகவும் விவரிக்கின்றார்.

மதர் இந்தியாவின் ஆசிரியரும் மற்றும் பல புத்தகங்களை எழுதியவருமான திரு. அமல் கிரண் என்பவர், ஸ்ரீ அன்னையிடம் சில சங்கடங்கள் பற்றி கூறிய போது அவரிடம் ஸ்ரீ அன்னை சாவித்ரி படிக்கும்படி பணித்தாராம். அவர், தான் தினமும் சாவித்ரி படிப்பதாகக் கூறினார், இதைக் கேட்டதும் ஸ்ரீ அன்னை சாவித்ரியை எவ்வாறு படிக்கிறாய் எனக் கேட்டதுடன், சாவித்ரியை நிதானமாகவும், சற்று உரக்கப் படிப்பதினால் உடலில் உணர்வலைகளை ஏற்படுத்துவதுடன், சுற்றுப்புறத்தினையும் தூய்மைப்படுத்தும் எனவும் கூறியுள்ளார். இதை ஒருவர் பௌதீக வாழ்க்கையில், ஒரு நிலையுணர்வுடன் உணரக்கூடும்.

ஒரு முறை நவம்பரில் நடைபெற்ற கூட்டத்தில் பெண்கள் சிலர் சாவித்ரியக்ஞத்தை ஏற்பாடு செய்திருந்தனர். இது ஓர் நிறுத்தமற்ற சாவித்ரியை தொடர்ந்துபடிக்கும் நிலையாகும். 23-ந் தேதி நவம்பர் மாதம் மாலையில் துவங்கி 24-ந் தேதி இரவு நிறைவு செய்யப்பட்டது. அனைவரும் பங்கேற்கும் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருந்த போதிலும், சில அன்பர்களுக்கு மட்டும் குறிப்பிட்ட நேரம் ஒதுக்கி, எந்த நேரமும் இருநபர்கள் அதைத் தொடரும் வண்ணம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இது ஓர் ஆச்சரியகரமான அனுபவமாக இருந்தது. நாங்கள் இந்த தொடர்படிப்பை நிறுத்தும்பொழுது 22 நபர்களும் ஒன்று சேர்ந்து சாவித்ரியைப் படித்தோம். நான் இல்லாத சமயத்தில் சற்று தள்ளி, கூடத்தில் அமர்ந்து கண்களை மூடிக்கொண்டு இந்தத் தொடர் படிப்பை கவனித்துக் கொண்டிருந்தேன். இந்த சாவித்ரியின் தொடர்படிப்பானது அறை முழுவதும் தூய்மைபடுத்தியதும், எங்களது உடலில் ஓர் உயர் அதிர்வுகளை ஏற்படுத்தியதும் பலரின் அனுபவத்தில் கண்டறிந்த ஒன்றாகும்.

எனது சகோதரி பாண்டிச்சேரி வந்திருந்த பொழுது நான் என்னுடன் தினசரி காலையில் சாவித்ரியை எடுத்துக்கொண்டு அதில் ஒரு முனைப்பட்டு ஏதாவது ஓர் பக்கத்தை திறந்து படிப்பதைப் பார்த்தாள். அவளது பிறந்த நாள் வந்த போது சாவித்ரியைப் படிக்கும் போது அந்த நாட்களுக்கான செய்தி கிடைக்கும் எனக்கூறி அதை செய்து பார்த்து ஆனந்தபரவசமடைந்து “அது உண்மை நான் எனக்கு தேவையான செய்தி கிடைக்கப்பெற்றேன்” என்று கூறி மகிழ்ந்தாள். அதன்பிறகு என்னைவிட அதிகமாக எந்தநேரமும், எப்பொழுதெல்லாம் அவளுக்கு உதவி தேவையோ அல்லது ஆறதல் தேவையோ அப்பொழுதெல்லாம் சாவித்ரி படித்து வருகிறாள்.

எங்கள் அலுவலகத்தில் ஒருவர் உள்ளார். அவர் சாவித்ரியை மிகுந்த பேராவலுடன் படிப்பதோடல்லாமல் பல பகுதிகளை தனது மனத்தில் பதிய

வைத்துக்கொண்டு பொதுவாக கருத்துப்பரிமாற்றம் செய்து கொண்டிருக்கும் பொழுது எழுப்பப்படும் கேள்விகளுக்கு, பலவிதமான விஷயங்களுக்கு, பல சமயங்களில் சாவித்ரியிலிருந்து சில வரிகளை மேற்கோள் காட்டி பதிலளிப்பார். நாங்கள் அவரது பேச்சுக்களை கேட்க மிகவும் விரும்புவோம். அவரது மருமகள் சில மாதங்களே ஆன குழந்தையுடன் தங்குவதற்கு வந்திருந்தார். எப்பொழுதெல்லாம் அவர் களைப்பாக இருக்கிறாரோ அப்பொழுதும், குழந்தை அழும் போதும், அதை சமாதானம் செய்ய இயலாத சமயமும், அந்தச் சிறிய குழந்தையைக் கொண்டு வந்து அவரின் அருகில் வைத்துவிட்டு “பாபா இவனைப் பாருங்கள் எனக் கூறுவராம்” இவர் சாவித்ரியை அக்குழந்தையருகில் படிப்பாராம், உடனே அந்தக் குழந்தை அமைதியாகிவிடுமாம். இச்செய்கை அந்த வீட்டு வேலைகளில் ஏற்படும் சிரமம், குழந்தையின் அழுகையால் உண்டாகும் இடைஞ்சல் முதலியனவற்றிலிருந்து ஒரு பெரிய விடுதலையாக இருக்கும் எனக் கூறுவதுடன், இப்படிப்பட்ட சூழல் தனது மருமகளுக்கு அடிக்கடி ஏற்பட்டாலும், இவர் மிகவும் மகிழ்ச்சியுடன் தனது பேத்திக்கும் சாவித்ரிக்கும் ஓர் பொற்சங்கிலி இணைப்பாக அமைந்ததை பெருமையாகவும் நினைத்து மகிழ்வார்.

எனக்கு தெரிந்த ஒரு குடும்பத்துத் தலைவியின் அனுபவம்: தனக்கு ஐந்து குழந்தைகள் வீட்டிலிருந்தும், தனது கணவன் பிரிந்து சென்றிருந்த சமயம், தான் மிகவும் தனிமையில் இருப்பதாகவும், கவலை சூழ்ந்திருப்பதாகவும் உணருபவர், ஒருநாள் சரிவர தூங்க இயலவில்லையெனவும், உடனே சாவித்ரியை படிக்க எண்ணியதாகவும் கூறினார். அவருக்கு ஆங்கிலம் தெரியாமலும் அந்த அளவு புரிந்து கொள்ளும் திறமையில்லாமல் இருந்தும் சாவித்ரி படிக்கத் தொடங்கிய சிறிது நேரத்தில் உறக்கம் தன்னை தழுவிக்கொண்டிருப்பதை உணந்ததாகவும் கூறினார். அந்த சம்பவத்திற்குப் பிறகு அவர் எப்பொழுதெல்லாம் கவலையில் ஆழ்கின்றாரோ, அப்பொழுதெல்லாம் சாவித்ரி அவருக்கு உற்ற துணையாக விளங்குகின்றது. பிறகு, சாவித்ரி சொற்பொழிவுகளைக் கேட்பதிலும், ஒலி நாடாக்களை புத்தகத்துடன் வைத்து ரசிப்பதிலும் நாட்டம் கொண்டார். அது அமைதி, சக்தி முதலியவற்றைத் தருவதுடன் உள்ளுணர்வுடன் தொடர்பு கொண்டு மகிழ்ச்சியையும் அளிப்பதை உணர்ந்தார் எனக் கூறினார்.

*தொகுப்பு & தமிழாக்கம் ஸ்ரீரங்கம்*
*ஆர். குப்புசாமி.*

இத்தனை சக்தி வாய்ந்த சாவித்ரியை நாம் புரிந்து கொண்டு, அதனால் ஏற்படும் பலன்களை பெறுவதுடன், மற்ற ஆர்வமுள்ளவர்களுக்கு எடுத்து கூறவும், இது பற்றி தெரியாமலேயே பலர் இருக்கும் சூழலில் ஒரு புதிய சக்தி புவியில் உள்ளது பங்கேற்றுப் பயன் பெறச் செய்ய வேண்டும் என்ற நோக்கில் சாவித்ரி பவன் ஆரோவில்லில் உள்ள அலுவலகத்தைத் தொடர்பு

கொண்டு தமிழ் நாட்டில் சாவித்ரியின் ஒளி பரவச்செய்ய ஒரு முதற் முயற்சியாக சாவித்ரி ஒளி (Light of Savitri) என்ற இலக்கிய குழு துவங்கி நவம்பர் 2002 முதல் ஸ்ரீரங்கம், கும்பகோணம், தஞ்சாவூர் முதலிய இடங்களில் அங்கீகாரம் பெற்ற ஸ்ரீஅரவிந்த சொசைட்டியின் மையங்களில் செயல்பட்டு வருகிறது.

இது சம்பந்தமாக ஒரு சிறிய சில பக்கங்களடங்கிய வெளியீடு சிலருக்கு வினியோகம் செய்தோம், அதன் பேரில் மேலும் விபரங்கள் கேட்டதால் இந்த விபரமான சிறிய கையடக்க புத்தகம் வெளியிட எண்ணி ஸ்ரீஅரவிந்தர் ஸ்ரீஅன்னை அவர்களின் அருளுடன் செயல்பட துவங்கியுள்ளோம்.

இது ஸ்ரீஅன்னை ஸ்ரீஅரவிந்தர் வழிநடக்க விழையும் அன்பர்களுக்கு ஓர் வரப்பிரசாதமாக இருக்கும் என எண்ணுகிறோம். மேலும் இது குறித்து யோசனைகளை வரவேற்கிறோம்.

**சாவித்ரி பாராயணம்**

சாவித்ரி பாராயணம் தொடங்குவதற்கு முன், ஸ்ரீஅன்னை அவர்களால் 9-12-1950 அன்று ஸ்ரீஅரவிந்தர் அவர்களுக்குச் செலுத்தப்பட்ட நன்றி கலந்த வணக்க வாசகங்களைப் படிக்க வேண்டும். இது சமாதியில் ஆங்கிலத்திலும், பிரெஞ்சு மொழியிலும் பொறிக்கபட்பட்டுள்ளது. அதன் தமிழாக்கம்:

> *“எங்கள் தலைவர் பிரானின் அன்னமய அங்கியாய் இருந்த திருமேனியே; எங்களது முடிவற்ற நன்றியுணர்வை ஏற்றருள். எங்களுக்காக எத்தனையோ செய்த, உழைத்து போராடிய, துன்பமேற்ற, நம்பிக்கை வைத்திருந்த எத்தனை எத்தனையோ சகித்துக்கொண்ட பொன்னுடலே! எங்களுக்காக எல்லா சங்கற்பங்களும் செய்த அனைத்து முயற்சிகளும் மேற்கொண்ட, சகல ஆயத்தங்களும் செய்து வைத்த, பற்பல சாதனைகள் முடித்த திவ்யதேகமே! உன்முன் சிரம் தாழ்த்தி வணங்குகிறோம். உனக்கு நாங்கள் பட்டுள்ள நன்றிகடனை, என்றும், எப்பொழுதும், ஒருகணமும் மறவாதிருக்க திருவருள் செய்.”*

ஸ்ரீஅன்னை

பிறகு சாவித்ரியில் பக்கம் 346, புத்தகம் III சாவித்ரியின் அவதாரம் குறித்து மகாசத்தி அருளிய பகுதியைப் பாராயணம் தொடங்கும் நாளிலும், நிறைவேறும்

நாளிலும் பாராயணம் செய்தல் அவசியம். (விரும்பினால் தினமும் பாராயணம் செய்யலாம்).

பாராயண நேரத்தைத் தனிநபர், குடும்பச்சூழல் சத்சங்கக் கூட்டமைப்பு முதலியவற்றிற்கு ஏற்ப நிரந்தரமான நேரம் வகுத்து அதை நிரந்தரம் செய்து கொள்ளல் அவசியம் தொடங்கிய இடத்திலிருந்து அன்றாடம் நிறைவு செய்த பக்கம் நினைவு கொண்டு மறுநாள்/மறுவாரம் அதன் அடுத்த பக்கத்திலிருந்து பாராயணம் செய்ய வேண்டும்.

**தனிநபர் பாராயணம்:** இது விருப்பப்பட்டு முழு ஆர்வத்துடன் அவரவர்கள் பாராயணம் செய்ய வேண்டியது. கூடிய வரை இதை ஒரு குறிப்பிட்ட நேரத்தில் பாராயணம் செய்தல் நலம். குறைந்த பட்சம் 2 பக்கங்கள் பாராயணம் செய்யலாம். பாராயணம் செய்யும் போது உரக்கப் படித்து, அந்த அதிர்வலைகள் உடல் முழுவதும் பரவச்செய்வது நலம்.

**குடும்பத்தில் பாராயணம்:** அனைவரும் ஸ்ரீஅன்னை ஸ்ரீஅரவிந்தர் பக்தர்களானால் மிகவும் எளிது. இல்லையேல் குடும்பத்தில் ஓரிநபர் பக்தர்களானாலும் அவர்கள் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் காலையிலோ, மாலையிலோ பாராயணம் செய்யலாம். ஒருவர் படிக்க மற்றவர் அதைமீண்டும் பாராயணம் செய்யலாம்.

**கூட்டுப் பாராயணம்:** சத்சங்கங்களில் தினம் (அல்லது) வாரம் ஒருநாள் கூட்டுப்பிரார்த்தனை செய்யும் முன்போ அல்லது பின்னரோ ஒருவர் உரத்த குரலில் படித்து மற்றவர்கள் ஒருங்கினைந்து கவனிக்கச் செய்யலாம்.

வாரம் ஒரு முறை எனில் இதை எளிதாகச் செய்ய சத்கங்கங்களுக்குச் செல்லுமுன் வீட்டில் தினம் ஓரிரு பக்கம் எழுதினால், சத்சங்கத்தில் பாராயணம் செய்ய எளிதாகவும் தடங்கலின்றியும் இருக்கும். அதிகபட்சம் சாவித்ரியில் ஒருபக்கத்தில் 36 வரிகளேயுள்ளதால் எழுவதற்கு 25 (அல்லது) 30 நிமிடங்கள் ஆகலாம்.

எழுதுவதால் அதிர்வலைகள் பெறலாம். ஒரு முறை எழுதுவது மூன்றுமுறை படிப்பதற்குச் சமம். முடிந்தபோதெல்லாம் சாவித்ரி தொடர்பாராயணம் ஏற்பாடு செய்து நடத்தலாம். இச்செயலின் நோக்கமே ஸ்ரீஅரவிந்தர் அவர்களின் அமானுஷ்யப் பார்வையில் மிகவுயந்ததாகச் சித்தரிக்கப்பட்ட காவியம் அகிலவுலகிலும், அனைத்து நேரங்களிலும் ஒலித்து அதிர்வலைகளை ஏற்படுத்த வேண்டும் என்பதே.

பாராயணத்தில் ஒன்றுபட்ட இசைவை ஏற்படுத்த ஒருவர் முதலில் ஒரு வரியைப் படிக்க வேண்டும். மற்ற அனைவரும் ஒன்று சேர்ந்து அதை திரும்ப ஒலிக்க வேண்டும்.

ஒரு முகப்பட்ட சிந்தனையும், பூரண இறையுணர்வும், உலகெல்லாம் "சாவித்ரியின் ஒளி" பரவவும், நம் உள்ளும் புறமும் மலரவும் வழிவகுக்கும்.

**பங்கு பெறுதல்:** சிறந்த நாளையை உருவாக்கப் பணிபுரிய விழையும் அனைவரையும் பங்குபெற அழைக்கிறது.

தனி நபராகவோ, பலர் ஒன்றுபட்டோ சாவித்ரி பாராயணம் செய்யலாம். சாவித்ரி பாராயணம் செய்வது தனி மனித வாழ்விலும், பிரபஞ்சத்திலும் ஒருங்கிணைந்த உயரிய அதிர்வலைகளை உருவாக்கும்.

பாராயணம் செய்ய இயலாதவர்கள், குழந்தைகள் போன்றோர் "சாவித்ரி வேத பாராயணம்" நடக்கும் தெய்வீகச் சூழலில் அமர்ந்து பிரார்த்திப்பது மேன்மை தரும்.

மேலும் சாவித்ரியின் மந்திர வரிகளை பார்த்து எழுதுவதும் மகோன்னதமாகும்.

# சாவித்ரி பவன்

ஒரு சூழலை ஆரோவில்லில் நாங்கள் கனவு காண்கின்றோம்.

சாவித்ரியே அதன் மூச்சு ஆகும்.

உலகின் பலபாகங்களிலிருந்தும், “சாவித்ரி” நேயர்களை வரவேற்கும்.

சாவித்ரி வாசிப்புகளை, ஆராய்ச்சிகளை ஊக்குவிக்கும் மையமாக அது விளங்கும்.

ஸ்ரீ அரவிந்தரின் காவியத்தை உணர்ந்து அனுபவிக்கும் வகையில் எல்லாவிதமான செயற்பாடுகளையும், தேவைகளையும், கொண்டிருக்கும்.

சூரிய உண்மையான சாவித்ரி வாசம் செய்யும் இடம் அது.

“சாவித்ரி பவன்” என்ற கனவு பூரணத்துவம் பெற்று உண்மை வடிவம் பெற அனைத்து அன்பர்களையும் அழைக்கின்றோம்.

# புதிய கட்டடம்

நவம்பர் 24, 2003-ல் சாவித்ரிபவனின் இரண்டாம் கட்ட கட்டடப்பணி ஒரு எளிய நிகழ்ச்சியுடன் தொடங்கப்பட்டது.

இந்தப் புதுக்கட்டடம், "சாவித்ரி மீது தியானித்தல்" குறித்து ஸ்ரீஅன்னை அவர்களின் வழிகாட்டலுடன் ஹூதா அவர்கள் தீட்டிய வண்ண ஓவியங்களைப் பார்வைக்கு வைப்பதற்காக அமைக்கப்படுகிறது.

நிகழும் 2004-ஆம் ஆண்டில் ஸ்ரீஅரவிந்தரின் பிறந்த நாளன்று இக்கட்டடம் முழுமையாய் நிறைவு பெற வேண்டும் என்பதை எங்கள் குறிக்கோளாய்க் கொண்டுள்ளோம்.

கட்டடத்தின் கட்டுமானம் மற்றும் அவை சார்ந்த செலவின் மதிப்பீடு ரூபாய் இருபது இலட்சம். எங்களின் குறிக்கோள் நிறைவேற உங்களின் உதவியையும் அன்பான ஆதரவையும் வரவேற்கிறோம்.



புதிய கட்டிடத்திற்கான முதலாவது செங்கல்லை
ஆரோவில் குழந்தைகள் வைக்கின்றனர் 24.11.2003

**சாவித்ரி பவன்:** பாரத் நிவாஸ் அருகில், மாத்ரு மந்திர் செல்லும் வழியில் உள்ளது.

இதன் அடிக்கல் நாட்டு விழா, ஸ்ரீஅரவிந்தர் அவர்களின் சாவித்ரிக்கு, எழுத்து வடிவம் கொடுக்க உறுதுணையாக இருந்து, இன்று தனது 100-வது வயதில் அடியெடுத்து வைக்கும் திரு. நிரோத்பரன் அவர்களால் 1995 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ஆம் தேதி நடைபெற்றது.

இந்தப் பவனம் தொடங்குவதற்கு முன் ஆலமரத்தடியிலும், கீத்துக் கொட்டகையிலும் பாராயணம் செய்யப்பட்டு வந்தது.

இங்கு மேலும் நடைபெறவுள்ள பணிகளும், இதன் முழுமையான விளக்கங்களும் அடுத்து வெளியிடப்படும்.

இதன் நோக்கம் தெரிந்து கொண்டு இதற்கு உறுதுணையாக இருக்கும் வண்ணம் தமிழ்நாட்டில் “சாவித்ரி ஒளி” (Light of Savitri) என்ற ஓரிலக்கிய மையக்குழு தொடங்கிச் செயல்பட்டு வருகிறது.

சாவித்ரி பவன்
பாரத் நிவாஸ்
ஆரோவில் 605 101